COUNTRY HERALD.

கிராம தூதன்

கௌரவ பத்திராதிபர்:

இரா. கு. நல்லதம்பிலம் பிள்ளை, சிவில்லிபீத்தர்!

1941 பி..பிரவரி

மலர்-ரு. இதழ்-உ.

சுழன்றும், ஏர்ப்பின்னது உலகர்—திருவள்ளுவர்

வாழ்க்கை முறை.

எளியோர்க்குப் பல தலை முறைகளாகச் செய்யப்பட்டு வந்த கொடுமை, எல்லையின்றி வளர்ந்து விட்டது. இனித் தாங்கமுடியாது.

நமக்கு உழைத்தவர்கட்கு நாம் உழைத்தாக வேண்டும்; இதுவேமுறை. இம்முறைப்படி ஒழுகினுற்றுன், எல்லா மக்களும்செவ்விதில்வாழலாம்; தவறினுல் துன்பம் வருவது திண்ணம். இதுவரை நமக்கு ஏழைகள் உழைத் துள்ளார்கள்; தொண்டு செய்திருக்கிறுர்கள். இனி நாம் அவர்கட்கு உழைக்கவேண்டிய முறையுண்டு.

அவர்களிடமிருந்துபெற்ற உதவிக்காக, நான் இயன்றவழிகளிலெல்லாம் அவர்கட்கு நன்மை செய்ய விருப்பங் கொண்டுள்ளேன்; அவ்வெளியவர் வா[illegible] அழகு பெற்[illegible]; அவர்கள் [illegible]பத்தைப் [illegible]வை என் [illegible]ம்.

[illegible]ாத்தாக்கூர்.

விசேடக் கட்டுரைகள்.

1. நியாயம் வழங்கப் படுமென்றுல்,...
2. மாசிப்பட்டக் கம்போடியாப் பருத்தி
3. கல்வியும் கிராமாபிவிருத்தியும்
4. விபசாயம் மிச்சந்தரும் முயற்சியாகுமா?
5. கூறுகெட்ட குப்பான்

([illegible]பக்கம் பொருளடக்கம் பார்க்க)

பிரசுரகர்த்தர்:

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

Y31 m21195,N31G1

N41.3.2.

802582

பொருளடக்கம்.

எண்	பொருள்	பக்கம்.
1.	கடவுள் வணக்கம் : பிரார்த்தனை	33
2.	பொன்னுரைகள் : பொறுக்குமணிகள்	34
3.	நியாயம் வழங்கப்படுமென்றால்தான், வறுமைப் பிணி தீரும்	35
4.	மாசிப்பட்டக் கம்போடியாப் பருத்தி	37
5.	சென்னைக் கூட்டுறவு விசாரணைக் கழக அறிக்கை	40
6.	கல்வியும் கிராமாபிவிருத்தியும்	43
7.	சுகாதாரம் : குடும்பவாழ்க்கை	
	அ. நெல்லுச் சோறு	45
	ஆ. நாட்டு வைத்தியம், மிருகவாகடம், பாகமுறை, சுகாதாரக் குறிப்புக்கள்	46
8.	விபசாயம் மிச்சந்தரும் முயற்சியாகுமா ?	47
9.	கூறு கெட்ட குப்பான்	51
10.	சென்னை மாகாணக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திட்டம்	52
11.	செய்தித் திரட்டு	
	அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்	53
	ஆ. கிராமப் புனருத்தாரண தலதாபனச் செய்திகள்	55
	இ. கூட்டுறவுக்கல்வி சுகாதாரச் செய்திகள்	55
	ஈ. கூட்டச் செய்திகள்	56
12.	அறிவுரைத் திரட்டு	
	அ விபசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள்	57
	ஆ. கிராமப் புனருத்தாரண தேச முன்னேற்றக் குறிப்புக்கள்	60
	இ. இலக்கிய இலக்கண அருங்கலைப் போதனுமுறை ஆராய்ச்சிக் குறிப்புக்கள்	61
	ஈ. சிறந்த வாசகங்கள், செய்யுள்கள், அறவுரைகள், பழமொழிகள்	62
	கால்நடைச் சந்தைகளும், விபசாயக் கண்காட்சிகளும்	64

புத்தகங்கள், அறிக்கைகள், பத்திரிகைகள் வரவு.

கீழேகண்ட பிரசுரங்களை அன்புடன் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அவற்றை உதவியவர்களுக்கு நம்முடைய நன்றியையும் செலுத்திக்கொள்ளுகிறோம்.

1. *திருநாவுக்கரசு. வாலாசாபாத்து இந்துமத பாடசாலை நூல் வெளியீடு 2.*

2. *மயிலம். திருக்கோவில் - திருமடவரலாறு. மடம் - தேவஸ்தான வெளியீடு. வெண்பாஆர். சி. துரைசாமி.*

3. Co-operator's Diary for 1941. co-operative Printing works Ltd. Coimbatore. *அங்கிலத்திலும் தமிழிலும். சாதா 4 அணு. அழகிய மேற்பையுடன் கூடியது 8 அணு. கூட்டுறவாளர்க்கு மட்டுமல்ல, எவருக்கும் பயன்படக்கூடியது.*

4. Report on the operations of the Department of Agriculture in the Madras Presidency for the year 1939-1940; The Government of Madras.

5. *விக்கிரம பொங்கல் மலர் 1940ம் ஆண்டு அறிக்கை. இந்து மத பாடசாலை. வாலாசாபாத்து.*

6. Report on the working of coop. Societies 1939-40. The Government of Madras.

THE COUNTRY HERALD

கிராம தூதன்

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை

"வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்".

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், சீவில்லிபுத்தூர்.

மலர்: ௩	1941 பிப்ரவரி-விக்கிரம, தை-மாசி	இதழ்: ௨

1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை.

அழிந்துவிடு மாக்கை; உயிர் அழிந்துவிடும்;
அழிந்துவிடும் அசையாக்கல்லும்;
கழிந்துவிடும் நாள்; கதையாய்ப் போய்விடும் நம்
முத்யோகம்; கனவாம் வாழ்வே;
ஒழிந்துவிடும் பொருள்; இருப்ப தருளொன்றே;
நன்மையொன்றே உறுதி; ஈசன்
பொழிந்துவிடும் அருளறிந்து போய்ப்புனித
வருள் நிறைப்பீர் புவனத்துள்ளே.

திருவனந்தபுரம் இலக்குமணபிள்ளை.

ஆக்கை அழிந்து விடும்; உயிர் அழிந்து விடும்; அசையாக் கல்லும் அழிந்து விடும்; நாள் (ஆயுள்) கழிந்துவிடும்; நம் உத்(தி)யோகம் கதையாய்ப் போய்விடும்; நம் வாழ்வே கனவாம்; (நம்) பொருள் ஒழிந்துவிடும்; அருள் ஒன்றே இருப்பது; நன்மை ஒன்றே உறுதி; ஈசன் பொழிந்து விடும் அருள் அறிந்து புவன (உலக)த்துள்ளே போய் புனித (தூய) அருள் (அருளை) நிறைப்பீர்.

---

2. பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்.

1. யாண்டுபல ஆக நரைஇல வாகுதல்
யாங்குஆ கியர்? என வினவுதிராயின்,
மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்;
யாண்கண் டனையர் என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்றலை,
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.

—புறநானூறு.

இத்தனை வயதாகியும் என் மயிர் நரைக்கவில்லை என்று என்னைக் கேட்டால், அதற்கு நான், 'என் மனைவி மக்கள் நல்லவர்கள், அறிவு உடையவர்கள்; என் வேலைக்காரர்கள் என் கருத்தின்படி நடப்பவர்கள்; என் நாட்டரசன் கொடுமை செய்யாமற் பாதுகாப்பவன்; நானிருக்கும் ஊரிற் பலர், அறிவு அகன்று புலன் அவிந்து அருளில் அடங்கிய பெரியோராவர்' என்று விடை யிறுப்பேன்!

2. அ. *இந்தியாவின் தியாக குணம் ஓங்குமென்றும், அதனோடு துன்புறுதற்கு இசையுங் குணமும் வளருமென்றும், நான் நம்புகிறேன்............இதுவே உண்மையான சுதந்திரம்; இதனினும் உயர்ந்தது வேறொன்றுமில்லை. தேச சுதந்திரமும் இதைக் காட்டிலும் மேலானதன்று. பலத்திலும் உலகச் செல்வத்திலும் மேனாட்டாருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு; ஆதலால், சாந்தமும் ஆயுதங்களை ஒழித்தலும் நலம் என்று அவர்கள் எவ்வளவு கூக்குரலிட்டாலும், அவர்களின் அஞ்சாத்தனம் அதனிலும் உரக்கக் கத்தும்.* (இரவீந்திரநாத்தாக்கூர்.)

ஆ. *எப்பொழுதும் நம்மைப் பற்றியும் நம்முடைய நலன்களைப் பற்றியுமே நினைத்துக்கொண்டிருக்கக்கூடாது. நம்மிலும் எளியவர்களுடைய நிலைக்கு வருந்தவேண்டும், இரங்கவேண்டும்; அவர்கள் பால் அனுதாபம் காட்டவேண்டும்; அவர்களுக்கு நம்மால் ஆன உதவிகளையெல்லாம் செய்யவேண்டும். நற்செயல்கள் நமக்கும் நன்மை செய்கின்றன; மற்றவர்களுக்கும் நன்மை செய்கின்றன.*

நல்வழி. Dr. L. E. Simpson.

3. பொழுது புலர்ந்தது யாஞ்செய்த தவத்தால்;
புன்மை இருட்கணம் போயின முன்பே;
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் குன்றன்
தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்துநிற் கின்றோம் ;
முழுவதும் எமையுடையாய் ! உயர்நடையாய் !
முகமலர்ந் தருள்மொழி புகல்வது மறந்தே
விழிதுயில் கின்றதோ ? இன்றமிழ்த் தாயே !
வியப்பிது காண்பள்ளி யெழுந்தரு ளாயே !

—பண்டித அ. கந்தசாமி பிள்ளை.

நியாயம் வழங்கப்படுமென்றால் தான், வறுமைப் பிணி தீரும்.

முன்னிதழில் உழவுத்தொழிலே மற்றெல்லாத் தொழில்களுக்கும் தாய்த்தொழிலென்றும், அது சரியாக நடைபெறாதபொழுது மற்றத் தொழில்களும் சரியாக நடைபெறமாட்டாவென்றும் விபசாயம் நல்ல மிச்சந்தரும் முயற்சியாக மாறினாலன்றி நம் நாட்டின் வறுமைப் பிணியும் தீராதென்றும் அது மிச்சந்தரும் முயற்சியாகுமா என்பதைப்பற்றிப் பின் விரிவாக எழுதுவதாகவும் சொன்னோம். அதனைப் பற்றி இவ்விதழில், பிறிதோரிடத்தில் விரிவாகவும் எழுதியிருக்கிறோம்.

விபசாயம் மிச்சந்தரும் முயற்சியாக மாறினாலே போதுமா? அதனோடு வறுமைப்பிணியைத் தவிர்ப்பதற்கெனத் தனி முயற்சியும் செய்ய வேண்டாமா? அந்த மிச்சத்தின் பயனை அதற்குரியார் பலரும் சரியாக அடையாதிருந்தாலும், வறுமைப்பிணி . தீர்ந்து போகுமா? அவர்கள் சரியாக அடைவதுதானெப்படி, என்பனவற்றையெல்லாம் நாம் இங்கே ஆராயவேண்டும்.

பசி வந்திடப் பத்தும் பறந்துபோமாதலால், விபசாயத்தை மிச்சந்தரும் முயற்சியாகச் செய்வதற்கும் அதன் தொல்லையில்லாதிருக்க வேண்டும். செவிக்குண வில்லாத போழ்து சிறிதே வயிற்றுக்கு ஈந்தாலும் போதுமென்று திருவள்ளுவர் காலத்திருந்திருக்கலாம். அவர் காலத்தில், நம் தமிழ்நாடு, எவரும் தேடி வருந்தாமல் அவர்பால் தானே வந்தடையும் செல்வத்தையுடைய நாடாக இருந்தது. இப்பொழுதோ, அவ்வாறாக இல்லை. உறு பசியும் ஓவாப் பிணியும் வந்து அலைக்கும் இக்காலத்தில் எவருமே அவ்வாறிருக்கமுடியாது. அது மட்டுமல்ல; பசித்திருப்பவர் எவரும் எதொரு காரியத்தையும் சீர் திருத்த வேலைகளையும் முன்னேற்ற வேலைகளையும், சரியாகச் செய்து கொள்ளவும் முடியாது. ஆகையால் விபசாயத்தை மிச்சந்தரும் முயற்சியாக்கும் பொழுதே, கூடுமானால் அதற்கும் சற்று முன்னதாகவே, பசியின்றி வாழுவதற்கான முயற்சியும் முறையாகச் செய்யப்படவேண்டும்.

கூட்டுறவு முறையைத் தங்கள் வாழ்க்கை முறையாகக் கொண்டிருக்கும் தென்மார்க்கிலும் (Denmark) பின்லந்திலும் (Finland) ஏழை பணக்காரர்களென்ற வித்தியாசமுமில்லை. உழையாதிருப்பவருமில்லை; பசித்திருப்பவருமில்லை. இந்நாட்டினர்போல் நாமும் பிறர்க்கும் சாதகமாக வாழ்வதையே முறையாகக்கொண்டு வாழ்ந்தால், நம் நாட்டினரனைவருமே பட்டினி பசியின்றி வாழமுடியும்.

முதலாளித்துவம் (Capitalism) அருகியும் சிறு குடியானவர்களும் சிறு தொழிலாளர்களும் பெருகியும் இருந்துவரும் பிரான்சு (France) உலாந்து (Holland) பெல்சியம் (Belgium), போலந்து (Poland), செக்கோசிலேவிகா (Czechoslovakia) முதலிய நாடுகளிலும் பட்டினி பசியும் வேலையில்லாத் திண்டாட்டமும் அவ்வளவாக இல்லை. இது நிற்க.

முதலாளிமார் கைப் பணமெல்லாம் தொழிலாளிகளின் உழைப்பால் வந்ததேயென்னும் கொள்கையை ஒப்பாதாரும், ஆலைத் தொழிலாளிகளின் கூலி குறைவதற்குத் தக்கதாக ஆலை முதலாளிகளின் இலாபம் அதிகப்படுமென்பதை மறக்கார். அதுபோலவே, நூல், வேட்டி, சேலை வியாபாரம் செய்கிறவர்களிடம் பெருகிவரும் செல்வத்திற்கு அவர்களிடம் பற்று வரவு செய்துவரும் நெசவாளிகளும்,

என் பிண்ணாக்கு வியாபாரம் செய்பவர்களிடம் பெருகிவரும் செல்வத்திற்கு அவர்களிடம் எள் வாங்கி எண்ணெயாக்கி விற்பவர்களும், கொடுக்கல் வாங்கல் செய்பவர்களிடம் பெருகி வரும் செல்வத்திற்கு அவர்களிடம் கடன் வாங்குகிறவர்களும் காரணமாயிருக்கிறார்களென்பதையும், முந்தியவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு பணக்காரர்களாகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு; பிந்தியவர்கள் ஏழைகளாயிருக்கிறார்களென்பதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். எதொரு தொழில் வரவையும் அதன் உற்பத்தித் தானத்திலேயே (Source) நியாயமான முறையில் (Fair distribution) கூலியும் இலாபமுமாக (Wages and profits) பகிரப்படுமென்றால், பிந்தியவர்கள் அதிக ஏழைகளாகவுமாட்டார்கள், முந்தியவர்கள் அதிகப் பணக்காரர்களாகவுமாட்டார்கள். அபேதவாதிகள் கோருகிறபடி பழைய செல்வத்தையும் பகிர்வது நியாயமில்லை, சாத்தியமில்லை. நம் நாடு சம்பந்தப்பட்ட அளவில் பணக்காரர்களும் ஏழையாவதைத் தவிர்த்து வேறொரு பிரயோசனமுமில்லையென்றாலும், இத்தகைய அநீதி பின்னும் வளர்க்கப்படுவது சரியல்ல.

செல்வத்தின் ஏற்றத்தாழ்வு மிகுதியாக உள்ள நாடுகளில், மத்தியதர வகுப்பினருடைய எண்ணிக்கையும் செல்வமும் மிகுந்திருப்பதற்குத்தக்கதாகவே, அந்நாடு பொருளாதார வளம் பொருந்திய நாடாகும். அதுபோலவே, விபசாய நாடுகளிலும் நில முதலாளிகளும் விபசாயக் கூலியாட்களும், நாட்டிற்கு அத்தனையாக பலந்தரக்கூடியதில்லை. நிலங்களில் பொறுப்பாகப் பாடுபடுபவர்களின் செழிப்பே அத்தகைய நாடுகளின் செழிப்பாகும். நில முதலாளிக்குக் கிடைக்கும் அதிக இலாபத்தினாலும் நிலம் பலப்படக்கூடியதில்லை. கூலியாட்களின் இலாபத்தினாலும் நிலத்திற்குப் பலம் உண்டாகக்கூடியதில்லை. நிலத்தில் பாடுபடுகிறவனும் நிலத்தில் கொஞ்சமே செலவு செய்து அதிக இலாபத்தை அடைய விரும்பினால், நிலமும் நாளுக்குநாள் கெட்டேபோகும்; விபசாய விளைவும் நாளுக்குநாள் குறைந்தே வரும்; சமுசாரிப்பிரியமும் இல்லாது போய்விடும். இப்படியாக, நில முதலாளி கூலியாட்கள் ஆகியவர்களுடைய வயிற்றுக்குப் போதிய உணவு நிலத்திலிருந்து கிடைக்கவேண்டியதற்கு உள்ள அவசியத்தைக்காட்டிலும் பாடுபடுகிறவனுக்குக் கிடைக்கவேண்டிய அவசியமே அதிகமாகும். இவற்றையெல்லாம் நில முதலாளிகளும் பாடுபடுகிறவர்களும் கூலியாட்களும் தாங்களாகவே தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பாதகம்ஏற்படாத விதமாகச்செய்து கொள்ள முடியாது. அரசாங்கம் ஒன்றே இதைச் செய்து முடிக்கக் கூடும்.

ஆலைத் தொழிலாளிகளுக்கு அவர்கள் வேலைசெய்ய முடியாத காலத்திற்கும் அவர்களுக்கு வேலை கிடைக்காத காலத்திற்கும் குடும்பச்செலவிற்குப் போதியதாக, வேலை கிடைக்கிற காலத்தின் கூலி அமையவேண்டும். அதுபோலவே, விபசாயக் கூலிகளின் வரவும் பாடுபடுகிறவர்களின் வரவும் அவர்களுடைய குடும்பச் செலவிற்குப் போதியதாக அமையவேண்டும். அப்படி அமைவதற்குச் சாதகமாகவே நில முதலாளியின் பங்கும் அரசாங்கத் தீர்வையும் அமையவேண்டும். இப்படியாக, கூலியையும் பாடுபடுகிறவன் நில முதலாளிப் பங்குகளையும் திட்டம் செய்யப் பஞ்சாயத்துக்கள் கிராமந்தோறும் இருக்கவேண்டும். சீமையில், நியாயமான பங்குபாகமே பாடு படுகிறவனிடமிருந்து நில முதலாளி வசூலிக்கலாமென்றும் அதற்கு அதிகம் தருவதாகப் பாடுபடுகிறவன் நில முதலாளிக்கு எழுதிக்கொடுத்திருந்த போதிலும் அது செல்லாதென்றும், அதுபோலவே விபசாயக்கூலிகளும் சமுசாரியோ தொழிலாளியோ — மிஞ்சினவன் கைப்பணியாரமாக, குறிப்பிடுகிறபடிக்கே நடைபெறக் கூடாதென்றும், இவற்றை முறைப்படுத்த ஒரு தலப்பஞ்சாயத்து (Agricultural wages and rates Tribunal) பலவிடங்களிலும் நியமிக்கப்படவேண்டுமென்றும் ஒரு சட்டம் இருந்து வரு

கிறது. அப்படியொரு சட்டம் இல்கும் ஏற்படாது நாம் நியாயமில்லாத பங்கு பாகத்திற்கு இடம் கொடுத்துக் கொண்டிருக்கும் வரை, விபசாயத்தில் மிச்சம் இருந்தபோதிலும் பாடுபடுகிறவர்களோ, கூலியாட்களோ நியாயமில்லாமல் சங்கடப்பட நேரலாம். ஆகையால், வரவுத்தானத்திலேயே அந்த வரவு சரியாக முறையாகப் பிரிக்கப்படவேண்டும். அப்படியொரு திட்டமில்லாதவரை, எவரும் பிறருக்கு நியாயம் வழங்குவதென்பது கூட இல்லாமல், பிறருக்குக் கேடுவிளைத்தும் தன் இலாபமொன்றையே பெரிதாகக் கருதியும் செய்தும் வரும் சுபாவமே வளரநேரும். அதனால், மிச்சமிருக்கும் படியாக விளைந்த காலத்தும் பலர் பட்டினியாயிருக்க வேண்டியதாகவே முடியும். வறுமைப் பிணியும் தீராது வளர்ந்தே வரும்.

---

4. விபசாயம் :

மாசிப்பட்டக் கம்போடியா பருத்தி அபிவிருத்தித் திட்டம், சிவில்லிபுத்தூர்.

என். சி. திருமலாச்சாரி பி. எஸ். சி. (அக்ரி)

குடியானவர்கள் அதிகப்பணம் அடைவதற்கு அநுகூலமாயும் சீக்கிரம் விற்கக் கூடியதாயும் உள்ள விளைபொருள் பருத்தியாகும். பருத்தி இந்தியாவிலும் இதர தேசங்களிலும் விளையாகிறது. ஆகையால், தற்காலத்தில் அதன் நயத்தை அபிவிருத்தி செய்வதுடன் அதன் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் இத்தேசத்தில் பெருமுயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த முயற்சியில் சென்னை மாகாண விபசாய இலாகாவும், பம்பாயில் இதற்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்திய மத்திய பருத்திக்கழகமும் மிக்க சிரத்தையெடுத்து வருகின்றன. தற்காலத்தில் விளைவதைக் காட்டிலும் பருத்தி விளைவை அதிகரிப்பதற்கும், பருத்தியின் குண நலத்தை விருத்தி செய்து அதன் மூலம் பஞ்சுக்கு அதிக விலை கிடைக்கும்படி செய்வதற்கும் புதுத் தினுசுப் பருத்தி உண்டுபண்ண வேண்டிய முயற்சி எடுத்துவரப்படுகிறது. அவ்வவ்விடங்களிலுண்டாகும் பருத்தியை நயமிக்கதாகச் செய்யவும் அதிக இலாபம் கிடைக்கக்கூடிய புதுத் தினுசுப் பருத்தியை உண்டுபண்ணவும் கோயன்புத்தூரிலும் இதர ஜில்லாக்களிலும் பருத்தித் தினுசு உண்டுபண்ணும் அநேக விபசாயப் பண்ணைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். உதாரணமாக, கருங்கண்ணிப்பருத்தி C 7. A 10. K 546. K 1. எனப் பெயரிடப்பட்டுள்ள தினுசுகள் உண்டாக்கப்பட்டுத் திருநெல்வேலி, இராமநாதபுரம், கோயன்புத்தூர் சில்லாக்களில் பரவச் செய்திருக்கிறார்கள். 171 × 20 தினுசுகள் குண்டூர், கிருட்டிண சில்லாக்களிலும் H 1: N 14: 23: 556 தினுசுகள் கடப்பை, கர்நூல், அனந்தப்பூர் வகையறா சில்லாக்களிலும் கோ. 2. 920. 1267 என்ற கம்போடியா தினுசுகளும் 4383, 3915 என்று இதுவரை கூறப்பட்டு வந்துள்ள கோ. 4. கோ. 3. என்ற கம்போடியா—உகண்டா பருத்தித் தினுசுகளும் கோயன்புத்தூர், மதுரை, இராமநாதபுரம் சில்லாக்களிலும் சேலம், திரிசிராப்பள்ளி, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு சில்லாக்களின் சில பாகங்களிலும் பரவச் செய்திருக்கிறார்கள். இம்மாதிரிப் புதுத் தினுசுப் பருத்தி இந்த மாகாணத்தில் தற்சமயம் 64 இலட்சம் ஏக்கர்களில் சாகுபடியாகிவருகின்றது. இதனால், குடியானவர்களுக்கு வருடம் ஒன்றுக்குச் சுமார் 5 இலட்சம் ரூபா அதிக வருமானம் கிடைக்கிறது.

சிவில்லிபுத்தூர் தாலுகாவில் மூன்று வருடங்கள் பரிசோதனை செய்து பார்த்ததின் பலனாக, கோ. 3. கோ. 4. தினுசுப் பருத்தி ஷை

தாலுகா பூமிக்கு மிகவுந் தகுந்தவையென்றும் அதிலும் மாசிப்பட்டம் விபசாயத்திற்கு மிகச் சிறந்த தென்றும் தெரிய வந்திருக்கிறது. மேலும் 920: கோ. 2 தினுசுப் பஞ்சுகள் 28, 34 நம்பர் நூல்வரைதான் நூற்க உபயோகப் படுகின்றன. மேற்சொன்ன புதுத் தினுசுப் பஞ்சுகள் 44 லிருந்து 50-ம் நம்பர் நூல் வரை நூற்க உபயோகமாகின்றன. அன்றியும், இவை இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்ன தாகவே பலனுக்கு வருகின்றன வாகையால் தண்ணீர் பாய்ச்சுவதும் இரண்டு மூன்று முறை குறைவாகத்தான் வேண்டியிருக்கிறது. ஆகை யால், சுமார் 13,000 ஏக்கர்களில் ஒவ்வொரு வருடமும் கம்போடியா பருத்தி சாகுபடியா கும் ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர், சங்கரன் கோவில் தாலுகாக்களில் இந்தத் தினுசுப் பருத் திகளைப் பரவச் செய்து அபிவிருத்திக்குக் கொண்டுவர வேண்டுமாய்ச் சென்னை மாகாணச் சருக்காரார் தீர்மானித்தார்கள். அதற்காக 12,000ரூபா செலவழித்து இந்த மூன்று தாலு காக்களிலும் மேற்சொன்ன தினுசுப் பருத்தி கள் பயிரிடும்படி செய்யவேண்டுமென்று 1939-40ம் வருடத்தில் உத்தரவிட்டார்கள். மூன்று தாலுகாக்களிலும் கம்போடியா பருத்தி சாகு படியாகும் இடங்கள்பூராவிலும் இப்புதுத்தினு சுகளே சாகுபடி செய்யும்படி செய்யவேண்டும் என்பது அவர்கள் விருப்பம். அதற்கெனப் பிரத்தியேகமாக, ஒரு விபசாய டிமான்ஸ்டி ரேட்டரையும் நியமித்தார்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில் 800 ஏக்கர் களில் மேற்கூறிய இரண்டு தினுசுப் பருத்திக ளும் 1940 வருடம் மார்ச்சுமீ பயிரிடப் பட் டன. இவற்றிற்குப் 'பருத்தி விதைப்பண்ணை' என்று பெயர். இவை விபசாய இலாகாக்காரர் கள் மேல் பார்வையிலிருந்து வந்தன. இப்பண் ணையின் நிபந்தனைகளாவன: (1) விதைப்ப தற்கு வேண்டிய பருத்தி விதைகள், சருக்கா ரால் இனமாகக் கொடுக்கப்படும். (2) செலவுக் காக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் குடியான வர்களுக்கு முன் பணம் கொடுக்கப்படும். (3) குடியானவர்கள் மேற்கூறிய தினுசு விதைகளை வேறு விதை கலப்பில்லாமல் விதைக்கவேண் டும். (4) செடிகள் முளைத்த பின்னர் வேறு விதப் பருத்திச்செடிகள் முளைத்திருப்பதாகத் தெரிந்தால் அவற்றைப் பிடுங்கிவிடவேண்டும். (5) பருத்தி எடுத்தவுடன் அதை நன்றாய் உலர வைத்து நயம் மிதம் பிரித்துவைத்து, விபசாய இலாக்காக்காரர்கள் மேல் பார்வையில் அவர் கள் குறிப்பிடும் இயந்திரசாலையில் பருத்தியை அரைத்து, அங்குக் கிடைக்கும் விதையை விப சாய இலாகாக்காரர்களிடம் கொடுக்கவேண் டும். (6) அப்படிக் கொடுக்கப்படும் விதைக ளுக்கு 250 இராத்தல் கொண்ட பொதி ஒன் றுக்கு நிலை வரத்துக்கும் ரூ. 2 அதிகமாக விலைகொடுத்து வாங்குவார்கள். (7) முதலில் குடியானவர்கள் விதைப்பதற்கு இலாகாக்கா ரர்களிடம் பெற்றுக்கொண்டிருக்கும் விதையை அப்பொழுது திரும்பக் கொடுத்து விடவேண்டும். (8) குடியானவர்கள் பெற்றுக் கொண்டிருக்கும் அட்வான்சுத் தொகையை யும் வாபசு செய்யவேண்டும்.

மேற்கூறிய 800 ஏக்கர்களில் 1940ஆம் மார்ச்சுமீ விதைக்க ஆரம்பம்செய்து ஏப்ரல் மாசத்தில் முடிவுபெற்றது. ஜூலை ஆகஸ்டு மாதங்களில் பருத்தியெடுப்பு முடிவுபெற்றது. குடியானவர்கள் மேற்படி நிலங்களில் பயிரிடு வதைச் ஸ்ரீவில்லிபுத்தூர் விபசாய டிமான்ஸ் டிரேட்டரும் ஸ்பெசல் டிமான்ஸ்டிரேட்டரும் அடிக்கடி மேல் பார்த்துவந்து, விதைப்பது உரமிடுவது தண்ணீர் பாய்ச்சுவது பருத்தி யெடுப்பது முதலியன பற்றி அப்போதைக்கப் போது செய்ய வேண்டியன சொல்லிவந்தார் கள். பயிர்களில் வேறுதினுசுப் பருத்திச்செடி கள் கலந்திருந்தால் அவற்றைப் பிடுங்கிவிடும் படி செய்தார்கள். பருத்தியெடுத்து முடிந்த வுடன் இராசபாளையத்திலுள்ள ஒரு இயந்திர சாலைக்குக் கொண்டுபோய் அங்கு நயம் மிதம் பிரித்தெடுத்து விபசாய இலாகாக்காரர்கள் மேல் பார்வையில் அரைத்தார்கள். விதைகளை நன்றாய்க்காயப்போட்டு, மாதிரி விதைகளை

மூளைக்கவைத்துப் பரீட்சித்துப்பார்த்து, நன்ருய் முளைக்கும் விதைகளை விபசாய இலாகாக்காரர்கள் வாங்கிக்கொண்டார்கள். மிதமான விதைகள் குடியானவர்களுக்கே திருப்பிக் கொடுக்கப்பட்டன. தாங்கள் விதைப்பதற்கு வாங்கிக்கொண்டிருந்த விதையையும் அட்வான்சுத் தொகையையும் குடியானவர்கள் திரும்பக்கொடுத்துவிட்டார்கள். இம் மாதிரி கோ 3, கோ 4 தினுசுப் பருத்திவிதைமூட்டைகள் 2500 வாங்கி அம் மூட்டைகளுக்கும் வி. டி. (மதராசு விபசாய டிபார்ட்மெண்டார்) என்ற ஈயமுத்திரையிட்டு, ஸ்பெஷலாய் அமர்த்தப்பட்டிருக்கும் கிடங்குகளில் சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட விலாசமுள்ள சீல் வைத்திருப்பதால் மோசத்திற்கு இடம் ஏற்படாமலிருக்கும்.

குடியானவர்களுக்குக் கிடைத்திருக்கும் இப் புதுத் தினுசுப் பஞ்சுகளை நல்ல விலைக்கு விற்பதில் குடியானவர்களுக்கு வேண்டிய உதவியும் செய்யப்பட்டது. சென்னை மாகாணத்திலுள்ள பலநூல் இயந்திர சாலைகளுக்கும் விளம்பரங்கள் அனுப்பினர்கள். பஞ்சு வாங்க வந்த வியாபாரிகள் பஞ்சுகளுக்கு உயர்ந்த விலை கொடுக்கும்படி செய்வதற்காக ஏலம் ஏற்படுத்தப்பட்டது. அவ்வாறு செய்ததினல் வியாபாரிகள் மேற்படி இரண்டு தினுசுப் பஞ்சுகளையும் அதிகப் பிரியப்பட்டுத் தக்க விலைகொடுத்து வாங்கினர்கள். அதனல், குடியானவர்கள் அதிக இலாபம் அடைவதற்கு இடம் ஏற்பட்டது.

784 இராத்தல் கொண்ட பாரம் ஒன்றுக்கு, கோ. 3 தினுசுப் பஞ்சு ரூ 328 வீதமும் கோ. 4 தினுசுப் பஞ்சு ரூ 323 வீதமும் விற்கப்பட்டன. அதே சமயத்தில் புரோச்சு ரூ 192 வீதமும் சாதாரணக் கம்போடியா ரூ 256 வீதமும் விற்கப்பட்டுவந்தன. புரோச்சு தினுசுக்கு மேல் ரூ. 136, ரூ. 131 அதிகமாகவும் சாதாரணக் கம்போடியாவுக்கு மேல் ரூ. 72, ரூ. 67 அதிகமாகவும் புதுத் தினுசுப் பஞ்சுகள் விற்கப்பட்டன. ஆகையால், இந்தத் தினுசுப் பஞ்சுகளுக்குத் தக்க உயர்ந்த விலை கிடைத்தது என்று சொல்லலாம். குடியானவர்களும் இந்த விலைக்குப் பஞ்சு விற்றதைக்கண்டு மிக்க சந்தோசமும் திருப்தியும் அடைந்தார்கள் என்பதற்கு ஐயமில்லை. ஆகையால், இதனடுத்தவருடத்தில் குடியானவர்கள் இதே தினுசுப் பருத்தி விதைகளை விதைக்க ஆசைப்படுவார்களேயொழிய வேறு தினுசுப் பருத்தி விதைகளை விதைக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

ஒவ்வொரு கிராம வாசிகளுக்கும் பருத்தி விதைகள் எளிதில் கிடைக்குமாறு இந்தத் தாலுகாவில் பல கிராமங்களில் பருத்தி விதை மூட்டைகளைக் கொண்டுபோய் வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்புதுத் தினுசுப் பருத்தி விதைகளின் மேன்மையைக் குறித்தும் அவை அநேகக் கிராமங்களில் விலைக்குக்கிடைக்கும் என்றும் விளம்பரங்கள் அச்சிடப்பட்டுக் கிராமவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்த இரண்டு தினுசு விதைகளைக் கிராமவாசிகள் வாங்கும் பொழுது சாக்குகளில் போடப்பட்டிருக்கும் ம. வி. டி. விலாசமுள்ள ஈய முத்திரைகளைக் கவனமாய்ப்பார்த்துச் சுத்தமான விதைகளை வாங்கவேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறார்கள். அவ்விலாசத்தைப்பார்த்து இதர தினுசு விதைகளை வாங்கி ஏமாந்து போகக்கூடாதென்று கிராமவாசிகள் எச்சரிக்கவும் படுகிறார்கள்.

5. கூட்டுறவு :

சென்னை மாகாணக் கூட்டுறவுக் கழக அறிக்கை.

V

நம் மாகாண நிலைமை.

பஞ்சாப் குழப்பங்கள்.

கடன் தொல்லையால் விபசாயிகளின் நிலைமை மாகாண மெங்கும் பெருங் கவலைக் கிடமாயிற்று. விபசாயிகள் தங்களுடைய நிலங்களை இழந்து வந்தனர். அவர்கள் அரும் பாடுபட்டு அதிகமே விளைவித்த போதிலும், அதன் பலனை அவர்களுக்குக் கடன் கொடுத்தவர்களே அடையக் கூடியதாக இருந்து வந்ததால் அவர்களுக்குத்தங்கள் நிலங்களில் விருத்தியாகப்பாடு படவும் ஊக்கமிருக்க வில்லை. இத்தகைய நிலைமையை மாற்றிக் கொள்ளுவதற்காக விபசாய நிலங்களின் பராதீனம் சம்பந்தமாக 1899-ம் வருடம் கொண்டுவந்த மசோதா மறுவருடமே சட்டமு மாயிற்று. அதன்படி விபசாயிகளின் நிலங்களை விபசாய இனங்களே கிரயத்திற்கு வாங்கவும் ஏலத்திலெடுக்கவுங் கூடும். மற்றவர்கள் அவற்றை அடைமான மாகப் பெற்றுக் கடன் கொடுத்திருந்த போதிலும் அவற்றைக் கழிவொத்தியாக இருபது வருடத்திற்கு மேற்படாத காலம் அனுபவிக்கக் கூடுமேயன்றி நிரந்தரமாக அவற்றை யடையக் கூடியதில்லை.

கூட்டுறவுக் கடன் சட்டம், 1904.

நிக்கல்சன் அறிக்கையைக் கவனித்த சென்னை அரசாங்கம் அதன்படி கூட்டுறவுச்சங்கங்கள் அமைக்கவேண்டியது அத்தனை அவசரமில்லை யென்றும் கிராமாந்தரங்களில் சிலசங்கங்களை யமைத்துப் பார்த்துக் கொண்டு பின் வேண்டியன செய்யலாமென்றும் இந்திய அரசாங்கத்திற்கு 1899-ம் வருடம் எழுதியது. அதன் பேரில் மற்ற மாகாணங்களின் அபிப்பிராயமும் கேட்கப்பட்டது. எல்லா அபிப்பிராயங்களும் சர் எட்வார்டுலா (Sir Edward Law) தலைமையின்கீழ் 1901-ம் வருடம் கூடிய கழகத்தால் பரிசீலனை செய்யப்பட்டன. இதற்கிடையில் 1901-ம் வருடம் அமைக்கப்பட்ட பஞ்ச நிவாரணக் கழகத்தில், நிக்கல்சனும் ஒரு அங்கத்தினராக அமர நேர்ந்தது. அந்தக் கழகம் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவே பஞ்சத்திற்கு நிவாரணம் ஏற்படக் கூடுமென்று வற்புறுத்தியும் எழுதியது. அதன்பின் சீமைக் கூட்டுறவு நிபுணர் உல்வ் என்பவரையும் கலந்து 1903-ம் வருடம் கொண்டு வந்த கூட்டுறவுக் கடன் மசோதா 1904-ம் வருடம் சட்டமாகியது. அந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது முதல் சில காலம் வரை, அரசாங்கம் ஹேமில்டன் நிதியிலிருந்தும் சொந்தத்திலிருந்தும் சங்கங்கள் பெறும் இருப்புத் தொகைகள் உள்பட அவற்றின் கொடுக்கல் வாங்கல் ரூ 2000 ஆகும்படியாகப் பாக்கித் தொகையை முதல் மூன்று வருடத்திற்கு வட்டியன்னியிலும் பின் 4 சதவீத வட்டியாகவும் உதவிவந்தது. அப்படி யுதவியதொகைகளை, ஒவ்வொரு வருடமும் பத்திலொரு பங்கு அசலும் வட்டியுமாகச் செலுத்தி விடவேண்டு மென்ற ஒரு நிபந்தனையே, சங்கங்களுக்கு விதிக்கப்பட்டது.

பின் நிகழ்ச்சிகள்:

கடன் தவிர்த்த மற்றவேலைகள் கூட்டுறவாகச் செய்வதற்கும் சங்கங்கள் பல சேர்ந்து மேற்பார்வை கொடுக்கல் வாங்கல் முதலியன செய்வதற்கும் சௌகரியமாக 1912-ம் வருடம் ஒரு கூட்டுறவுச் சட்டம் செய்யப் பட்டது. அதன் பின் நம் மாகாணத்திற்கென ஒரு தனிச்சட்டம் 1932-ம் வருடத்திலும் நில அடைமான பாங்குகளுக்கென ஒரு தனிச்சட்டம் 1934-ம் வருடத்திலும் செய்யப் பட்டன.

இவற்றிற் கிடையே 1915-ம் வருடம் மெக்ல கான் கழகமும் (Meclagam Committee) 1928-ம் வருடம் தவுன்சென்டு (Townsend) கழகமும் 1928-ம் வருடம் மன்னர் விவசாய விசாரணைக் கழகமும் (Royal Agricultural Commission) 1931-ம் வருடம் மத்திய பாங்கு விசாரணைக் கழகமும்(Central Banking Enquiry Committee) கூட்டுறவைப் பற்றி விசாரணை செய்து தங்கள் கருத்துகளை வெளி யிட்டிருக்கின்றன. அவற்றிற்கும் பின்னதாக நேர்ந் திருக்கும் நிலைமைக்குத் தக்கதாக வேண்டும் சீர்திருத்தங்களைச் செய்து கொள்ளுவதற்காகவே இந்தக் கழகம் நியமிக்கப் பட்டதாகும்.

நம் மாகாணக் கூட்டுறவியக்கம்.

நம் மாகாணத்தின் பலபாகங்களும் செழிப்பிலும் சனப்பெருக்கிலும் ஒன்றுக் கொன்று வெகுவாய் வித்தியாசப் படுகின்றன. விசாகபட்டினம், கீழ்மேல் கோதாவரி, கிருட்டிணு, குண்டூர் ஆகிய வடசருக்கார் மாதிரி நெல்லூர் செங்கற்பட்டு தென்னுர்க்காடு ஆகிய கீழக்கரை சில்லாக்களில்லை. தஞ்சாவூர் சில்லா இவற்றினும் வேறுபட்டதாகவே யிருக்கிறது. திரிசிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி சில்லாக்கள் ஒரு தனிப் பகுதியாகும்; பல்லாரி, கர்நூல், கடப்பை, அனந்தப்பூர் சில்லாக்கள் மற்றவற்றினும் பிரிந்திருக்கும் தட்சண பீடபூமியாகும். சித்தூர் வடஆர்க்காடு சேலம் கோயன்புத்தூர் ஆகிய மத்திய சில்லாக்கள் மற்றோர் தனிப் பகுதியாகும். மேலக்கரையைச் சேர்ந்த தென் கன்னடம் மலையாளம் மற்றவற்றினும் வெகுவாக வித்தியாசப்படுகின்றன.

வட சருக்கார் பூராவையுமே ஒரே மாதிரியெனச் சொல்லிவிட முடியாது. கோதாவரி கிருட்டிணு தீரவாசம் மாதிரியாகக் கடற்கரையோரமுமில்லை; பிந்தியவற்றிற்கும் குறைந்ததாகவே மலைப்பிரதேசம் (Agency tracts) இருக்கிறது. கோதாவரி கிருட்டிணு தீரவாசமும் காவிரி தீரவாசமும் செழிப்பாயிருந்த போதிலும், அங்கே சனப்பெருக்கு அதிகமாயிருப்பதால் தனி நபரின் செல்வம் பிற இடங்களிலிருப்பதற்கும் அதிகமாக இருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. என்றாலும், இந்தப் பிரதேசங்களில் விளைவு துயர்ந்து இருந்துவரக் காண்போம். கீழக்கரை சில்லாக்களில் வடகீழ்ப் பருவகாற்றுக் காலத்திலேதான் அதிக மழை பெய்யக்கூடும். சாதாரணமாக, அங்கும் குளங்களிலிருந்துதான் தண்ணீர் வந்து பாயவேண்டும். நெல்தான் அங்கே முக்கியப் பயிராக இருக்கிறது. தென் சில்லாக்களுக்கும் வடகீழ்ப் பருவ மழையே முக்கியமான மழை. ஆனால், இந்தச் சில்லாக்களின் தரை கீழக்கரை சில்லாக்களின் தரைக்கும் நிரம்பவும் வித்தியாசப்பட்டதாகவும் பருத்தி சாகுபடியாகக்கூடியதாகவுமிருக்கிறது. தட்சண சில்லாக்ககளில், பருத்தியும் நிலக்கடலையும் உண்டாகின்றன. மத்திய சில்லாக்களில், கோயன்புத்தூரில் பருத்தி அதிகமாகவும் மற்றச்சில்லாக்களில் நிலக்கடலை அதிகமாகவும் விளைகின்றன. குண்டூர் புகையிலைக்கு வெகு பொருத்தமானதாக இருக்கிறது. தட்சண சில்லாக்களும் மத்திய சில்லாக்களும் இரண்டு பருவ மழைகளையும் எதிர் பார்த்து நிற்கின்றன; குளத்தை வைத்தே சாகுபடியாகின்றன. கோயன்புத்தூர் சில்லாவில் நிலங்களில் சாகுபடிசெய்யக் கிணறுகளும் ஏராளமாயிருக்கின்றன. மேலக்கரை சில்லாக்களில் தென்மேற்குப் பருவ மழை ஏராளமாகப் பெய்கிறது. அங்கே சில பாகங்களில், தென்னையும் கமுகும் வளமாக உண்டாகின்றன. மற்றும் பாகங்களில், நெல் செம்மையாகவும் விளைகிறது. சேலம் சில்லாவைச் சேர்ந்த ஏர்க்காட்டையும் நீலகிரி திருவாங்கூரையும் மற்றப் படி மேலக்கரை சில்லாக்களோடு சேர்க்கலாமென்றாலும், அங்கே தேயிலை காப்பி முதலியனவும் உருளைக்கிழங்கு முதலிய கிழங்குகளும் காய்கறிகளும் பழங்களும் மிகுதியாகப் பயிரிடப்படுகின்றன. கோயன்புத்தூர் சேலம்

குண்டூர் ஜில்லாக்களிலும் மற்றும் சில இடங்களிலும் கன்று காலிகள் மிகுதியாகவும் வளர்க்கப்படுகின்றன. திராவாசங்களிலும் மேலக்கரையிலும் வடகிழக்குச் சித்தூரிலும் தென் கடப்பையிலும் வாழை ஆரஞ்சு முதலிய பழங்களும் விளைகின்றன. தண்ணீரை வைத்த மகசூலாயிருக்கும் நெல் தவிர்த்த மற்றப் பயிர்களெல்லாம் அங்கங்கே காணும் நிலத்தின் வளத்திற்கேற்பவே விளைவனவாக இருக்கின்றன. கனத்த களிமண் தரை நிறைந்த தட்சண ஜில்லாக்களிலும் கோயன்புத்தூரிலும் தென் ஜில்லாக்களின் சில பாகங்களில் பருத்தியும் சோளமும் நன்றாக விளைகின்றன. மணற்பாங்கான தரை நிறைந்த வட ஆர்க்காடு முதலிய ஜில்லாக்களில் நிலக்கடலையே அதிகமாக விளைகிறது.

கோதாவரி தஞ்சாவூர் திரவாசப்பிரதேசங்களில் சதுரமைலுக்கு 600 பெயருக்குக் குறையாமலும் வசிக்கின்றனர். தட்சண ஜில்லாக்களில் சதுரமைலுக்கு 200 பெயரும் வசிக்கக்காணோம். திரவாசங்களில் சாகுபடிக்காகவும் சாகுபடிக் காலத்திய குடும்பச் செலவுகளுக்காகவுமே வெகுவாகக் கடன்கள் வாங்கப்படுகின்றன. இப்படிக் கடன்கள் அதிகமாக இருந்தாலும் சீக்கிரமே செலுத்திவிடப்படுகின்றன. அரிதாகவே மழை பெய்யும் தட்சண ஜில்லாக்களில், வாங்குகிற சிறு கடன்களும் குடும்பச் செலவுகளுக்காகவே வாங்கப்படுகின்றன. இப்படிக் கடன்களைப் பின்னால் நன்றாக மழை பெய்கிற காலத்திலும் வசூலிப்பது சிரமப்படுகிறது. திரவாசங்களில் கடன்கள் அதிகமானாலும், நிலங்கள் அதிக விலை பெறக்கூடியதாக இருப்பதால் அவற்றைத் தீர்ப்பதும் அவ்வளவாகச் சிரமப்படுவதில்லை. ஆதலால், அந்தப்பிரதேசங்களில் நில அடைமான பாங்குகளும் நன்றாக வேலைசெய்கின்றன. தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள 9 நில அடைமான பாங்குகளும் கீழ்க்கோதாவரியிலுள்ள 8 பாங்குகளும் மேல் கோதாவரியிலுள்ள 6 பாங்குகளும் கிருட்டிணாவிலுள்ள 7 பாங்குகளும் சேர்ந்து ஒரு கோடி ரூபா வரை கடன் வாங்கிக் கொடுத்திருக்கின்றன. தட்சண ஜில்லாக்களிலுள்ள 8 பாங்குகளும் 4 இலட்ச ரூபாகூடக் கடன் வாங்கிக் கொடுக்கவில்லை.

கீழ்க்கோதாவரி ஜில்லா இராமச்சந்திரபுரம் தாலூகாவில் 114 கிராமங்களுக்கு 87 சங்கங்களிருக்கின்றன. பெல்லாரி ஜில்லா அடோனி தாலூகாவில் 164 கிராமங்களுக்கு 29 சங்கங்களே இருக்கின்றன. ஐந்து பெயரை ஒரு குடும்பமெனக் கணக்கிட்டுப் பார்க்க, கீழ்க்கோதாவரி ஜில்லாவில் 16சதமானம் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்திருக்கிறது; பெல்லாரியில் 6 சதமானமே சேர்ந்திருக்கிறது. பெல்லாரி வகையறா தட்சண ஜில்லாக்களில் கடன் தேவையளவும் குறைவாக இருக்கிறது; நபர்வாரி திரும்பச் செலுத்தும் சக்தியும் குறைவாகவேயிருக்கிறது. திரவாசங்களில் கூட்டுறவுச் சங்கங்களும் அதிகமாக இருக்கின்றன; கொடுக்கல் வாங்கலும் அதிகமாக இருக்கின்றன; கொடுத்த பணத்திற்கும் அவ்வளவாக மோசமில்லை.

மேலக்கரையில் வழங்கிவரும் மருமக்கள் தாயமும் கூட்டுறவின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது. நில அடமான பாங்கும் இந்தப் பிரதேசத்தில் நல்ல வேலை செய்யக் காணவில்லை. மலையாளத்திலும் தென் கன்னடத்திலும் நில பாத்தியதை சம்பந்தமாகவும் பல சிக்கல்களிருக்கின்றன. அவற்றின் காரணமாக, நிலங்களைப் பராதீனம் செய்வதும் அடைமானம் செய்வதும் அவ்வளவு எளிதாக இல்லை.

சில பிரதேசங்களில் விவசாயமெல்லாம் உணவுக்காகவே செய்யப்படுகிறது. அப்படி விளையும் தானியங்களும் அனேகமாக அந்தந்தப் பிரதேசத்திலேயே செலவாகி விடுகின்றன. நெல் மட்டும் அதுவும் ஏகதேசமே வெளியிடம் போகக்கூடியதாக விளைகிறது. உணவுப் பயிர் தவிர்த்த மற்றச் சாகுபடி அனேகமாகப்

பருத்தி நிலக்கடலை தென்னை புகையிலையாகவே யிருக்கின்றன. சமீபத்தில் கோயன்புத்தூர் சேலம் மதுரை ஜில்லாக்களில் வியாபார விளைபொருள்களின் விற்பனைக்கான சௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன; அந்த மாதிரி நெல் அதிகமாக விளையும் இடங்களில் அதனை விற்பதற்கான சௌகரியங்கள் செய்து கொள்ள வியாபார நிலைமை இடந்தருவதாயில்லை. நம் மாகாண விற்பனை விருத்தியாவதற்குக் கூட்டுறவுச் சங்கங்களைக் காட்டிலும் போக்குவரவு சாதனங்களே அதிக அவசியமாக இருக்கின்றன. மதுரை கோயன்புத்தூர், சேலம், கோக்கிநாடா முதலிய வியாபார தலங்களில் கூட்டுறவு முறை விருத்தியாவதற்கும் இடமிருக்கிறது.

நம் மாகாணத்தில் $86\frac{1}{2}$ சதமானம் கிராமங்களில் வசிக்கின்றனர். சமீப காலமாக நூல் நூற்கவும் துணி நெய்யவும் சருக்கரை தீப்பெட்டி செமண்டு சவர்க்காரம் செய்யவும் தொழிற்சாலைகள் அதிகமாகப் பெருகி வருகின்றன. குடிசைத் தொழில்களும் மற்றும் சிறு தொழில்களும் அவ்வளவாக விருத்தியாகவில்லை. அவையெல்லாம் சில வருடங்களுக்கு முன்பே அழிந்துபோய்விட்டதால், விவசாயிகளுக்கு வேறு உபதொழில்களுமில்லாமல் சங்கடப்படுகின்றனர். கைத்தறி நெசவிற்கு ஆலைப்போட்டியும் இருந்து வருவதால் நெசவுத் தொழிலும் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. சமீப காலம்வரை மின்சார சக்தியும் பயன்பட்டு வரவில்லை. கோயன்புத்தூர் சேலம் ஜில்லாக்களில் மழை பெய்யாமல் போவதால் சனங்கள் வெகுவாகச் சங்கடப்பட்டும் வருகின்றனர். அநேக இடங்களில் கிணறுகளிருந்தாலும் ஒரு பருவத்திற்கு மேல் மழை தவறுகிறபோது கிணறுகளும் வறண்டு போகின்றன. தட்சண ஜில்லாக்களில் கர்நூல் கடப்பைக் கால்வாய்ப் பாசனமும் மற்றும் சில பாகங்களும் தவிர்த்து மற்றப் பாகங்களெல்லாம் அடிக்கடி பஞ்சங்களால் சங்கடப்படுகின்றன. கரிசல் பருத்தி நிலங்கள் செழிப்பானவைகளாகவும் ஈரத்தைச் சேகரித்து வைத்துக்கொள்பவைகளாகவும் அதனால் கொஞ்சம் மழையிலும் நல்ல பலன் தரக்கூடியனவாகவும் இருக்கின்றன. பெல்லாரியிலும் அனந்தப்பூரிலும் அடிக்கடி தீர்வை வசாவும் கொடுக்க வேண்டியதாய் ஏற்படுகிறது; பஞ்ச நிவாரண வேலைகளும் செய்யவேண்டியதாக நேருகின்றன. இந்தப் பிரதேசங்களில் பஞ்சத்தைத் தாங்கக்கூடிய அளவிற்குச் செல்வத்தைப் பெருக்கினாலொழிய, கூட்டுறவு வேலைகளும் செம்மையாக நடைபெற முடியா.

(தொடரும்)

---

6. கல்வி:

கல்வியும் கிராமாபிவிருத்தியும்

I. W. Moomaw M. Sc, Anklesvar

(சாரம் II)

கிராமவாசிகளின் அனுபவத்தையும் அவர்களுடைய தற்காலப்போக்கையும் பிற்கால நோக்கையும் அனுசரித்த கல்வியாகவே, கிராமக் கல்வி யமையவேண்டும். அவர்களுக்குதவும் கல்வியாக அவர்கள் குழந்தைகள் விருத்தியாவதற்குதவும் கல்வியாக இருந்தால் மட்டுமே அவர்கள் அதில் அக்கறைகொள்ள முடியும்.

கிராமங்களில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களும், மிகுந்த அனுபவமுடையவர்களாகவும் நல்ல விளைவைக் காண்கிறவர்களாகவும் கால்நடைகளைத் திறம்பட வளர்ப்பவர்களாகவும் இருக்கக் காண்கிறோம். கல்லூரிகளில் போய்ப்படித்து வந்தவர்களைக் காட்டிலும், பிறருக்குதவுவதிலும் பிறரை உபசரிப்பதிலும் யோக்கியமாக வாழ்வதிலும் அவர்கள் சிறந்தவர்களாக இருக்கின்றனர். சிலர் எழுதப்படிக்கத் தெரிந்திருந்தும் பிறருக்குப் பயன்படாமலிருக்கின்றனர். சிலர் தாங்கள் படித்ததையெல்லாம் பிறரை மோசம் செய்வதற்கே உபயோகிக்கின்றனர். ஆகையால், எழுதப் படிக்கத் தெரிவதொன்றே போதிய கல்வியாகாது. மாணவமாணவிகளை உலக வாழ்க்கைக்குத் தயார் செய்வதுதான் கல்வியின் முக்கிய நோக்கமாக இருத்தல்வேண்டும். ஆசிரியர் அவர்களுடைய அக்கம் பக்கத்தை முதலாவதாகத் தெரியவேண்டும். அவர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் தங்கள் வீடுகளில் என்ன விதமாக வாழ்கிறார்களென்பதை அவர் முதலில் தெரியவேண்டும். அவர்களுடைய ஒழுக்கம் சுகம் உணவு உடை விளையாட்டு முதலியனவும் அவர் தெரியவேண்டும். அறிவு பயன்படும் அறிவாக இருந்தால் மட்டும் சக்தியுள்ளதாக, பயனுள்ளதாக இருக்கக்கூடும். அப்படி யறிவையே அவர் அவர்களுக்குப் புகட்டவேண்டும். வயதாகஆகக் கணக்கு எளிதில் பிடிபடக்கூடுமாதலால், வயதான பிறகு மேல்வகுப்புக்களிலேயே கணக்கைச் சொல்லி வைக்கலாம்.

பெற்றோர்களும் பள்ளிக்கூடவேலைகளில் அக்கறை கொண்டவர்களாக இருக்கவேண்டும். பள்ளிக்கூடத்தில் சுகாதாரம் எதற்காகப் போதிக்கப்படுகிறதென்பதை அவர்களுணருவார்களென்றால், வீட்டிலும் அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவந்துவிடுவார்கள். அப்படியே கிராமாபிவிருத்திக்கான பாடங்கள் சொல்லிவைக்கப்படுவதையெல்லாம், அவர்களறிவார்களென்றால், அவர்கள் அந்த ஆசிரியரைத் தங்களுக்கவசியம் வேண்டியவரென்றே கருதுவார்கள்.

ஆசிரியர் கிராமப் பொருளாதார நிலைமையையும் சமூகத்தேவையையும் கவனித்து வருவதென்றால், அவருக்குப் பாடம் சொல்லிவைக்க நேரமிராதே யென்று நினைக்கலாம். மாணவமாணவிகளின் வாழ்க்கையை அவர் சரியாகத்தெரியும் போது, அவர்கள் வாழ்க்கையை யொட்டி அவர்களுக்கு அவரால் கற்பிக்கமுடியும். அப்படிக் கற்பிக்கும் போது அந்தப் போதனை அவர்களுக்கு எளிதிலும் படும். அவருடைய உணர்ச்சியையும் அவர்கள் ஏற்று அதனை யனுசரித்து நடக்கவும் முயலுவார்கள். அவர்களுக்கும் பள்ளிக்கூடம் போகத் தவறக்கூடாதென்ற ஆசையுண்டாகும். பெற்றோர்களும் தாங்களாகவே பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கனுப்புவார்கள். இப்படியாகப் பிள்ளைகள் ஒழுங்காகவும் திட்டமாகவும் பள்ளிக்கூடமும் வந்து சேருவார்கள்; நல்ல பயனும் அடைவார்கள்.

ஒருநாட் காலையில் ஒரு ஆசிரியரோடு நான் போனேன். இரண்டு வாரத்திற்கொரு தடவையாவது ஒவ்வொரு பிள்ளைகள் வீட்டிற்கும் போய்ப் பார்த்து வருவது அவருடைய வழக்கம். அந்தக் காலத்தில் அந்தக் கிராமமெங்கும் காய்ச்சலடித்துக் கொண்டிருந்தது. அவர் கையில் கொயினா மாத்திரைகளும் அனற்பதனியும் (Thermometer) இருந்தன. இரண்டு பேருக்கு அவர்களுடைய காய்ச்சல் என்ன விதமாக இருக்கிறதென்று பார்த்து அவர்களுக்கு மருந்தும் கொடுத்தார். சுகவீனமாயிருந்த ஒரு கிழவனைப் பார்த்து அவனை உற்சாகப்படுத்தினார். முகங்கால் கழுவாது பள்ளிக்கூடம் போகப் புறப்பட்டுக் கொண்டிருந்த பிள்ளைகளை முகங்கால் கழுவிப் போகும்படி வீட்டிற்குத் திருப்பிவிட்டார். இன்னொருவன் கிணறு கட்டிக்கொண்டிருந்தவனைக் கண்டுபேசி, அவனுடைய வேலையில் அவனை உற்சாகப்படுத்தினார். வழியிலிருந்த

ஒரு தோட்டத்திற்குள் போய், அங்கேயிருந்த பழைய பையன்களையும் கண்டுபேசினர். அவர்களுடைய பெற்றோர்களைப் பார்த்து, மற்றும் சிறு பிள்ளைகளையும் பள்ளிக்கூடத்திற்கனுப்பும்படி கேட்டுக்கொண்டார். இப்படிப்பல காரியங்களில் அக்கறை கொண்டுள்ள ஆசிரியர் வேண்டுகோளை அவர்கள் மறுப்பதும் சிரமப்படும்.

ஆசிரியருக்குப் போதிக்கும் திறமையைக் காட்டிலும் ஒழுக்கமும் மனிதத்தரமும் அதிக அவசியமாக வேண்டும். அவருக்கு முதலுதவியும் (First aid) தெரிந்திருக்க வேண்டும். விபசாயமும் கொஞ்சம் தெரியவேண்டும். குழந்தைப் பருவந்தான் படிப்பதற்கு ஏற்ற பருவமாதலால், அந்தப் பருவத்தில் அவர்களைப் படிப்பதில் அக்கறை கொள்ளும்படி செய்வதற்காகவேனும் அவர் அவர்களுடைய அக்கம் பக்கத்தையும் அவற்றை விருத்தி செய்யக்கூடிய வகைகளையும் தெரிந்திருக்க வேண்டும்.

(தொடரும்.)

---

7. அ. சுகாதாரம்: குடும்ப வாழ்க்கை

நெல்லுச் சோறு.

I

உலகத்திலேயே பேர்பாதிப் பேர் அரிசியுணவேயுண்கின்றனர், நம் நாட்டிலும், சாகுபடியாகும் நிலங்களில் மூன்றிலொரு பாகம் நெல்லே சாகுபடியாகிறது; அதிலும் மூன்றிலொரு பாகமே கோதுமை சாகுபடியாகிறது. நம் மாகாணத்தின் கீழ்ப் பாகத்திலும் ஒரிசாவிலும் வங்காளத்திலும் அசாமிலும் விளையும் தானியங்களில் முக்கால்வாசிக்குமேல் நெல்லாகவே யிருக்கிறது. நம் நாட்டில் எந்த மாகாணத்திலிருந்தும் வெளியிடங்களுக்கு ஏற்றுமதியாகக்கூடியதாக நெல் விளைவதில்லை. சென்ற பத்து வருடங்களில் நம் மாகாணத்தின் சனத்தொகை 10 சதவீதம் விருத்தியாக நெல்லின் விளைவு 2 சத வீதமே அதிகமாகியிருக்கிறது. இந்த நிலைமையில் நம் மாகாணத்திற்கு வேண்டிய நெல் வருடா வருடம் பர்மாவிலிருந்தே வரவேண்டியதிருக்கிறது. 1935-36ம் வருடத்தில் மட்டும் 10 இலட்சம் டன்னுக்கும் அதாவது நம் மாகாணத்தின் தேவையில் ஐந்திலொரு பங்கிற்கும் அதிகமாக அங்கிருந்து வந்திருக்கிறது. (நம் மாகாணத்தில், தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து கொஞ்சம் நெல் கொழும்புக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தது. தஞ்சாவூர் வாசிகள் சொந்த நெல்லை விற்றுவிட்டுப் பர்மா நெல்லை வாங்கிக்கொண்டிருந்தனர். இனி கொழும்புக்கு ஏற்றுமதியாவதும் குறைந்துவிடவும் நின்றுவிடவுங்கூடும். ப-ர்) சென்ற சில வருடங்களாக 10 சத வீத முதல் 30 சத வீதம் வரை நெல் விளைவை அதிகப்படுத்தக்கூடியதான பல திருத்த முறைகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர். அந்தத் திருத்த முறைகளை நாம் கையாடினுலொழிய நம் மாகாணம் பர்மா நெல்லை வருடா வருடம் வாங்கிவரவேண்டியதான நிர்ப்பந்தமும் இருந்து வரும்.

அரிசி வெகு பேருணவாக இருப்பதாலும் ஆலையரிசியை யுண்பதால் சில நோய்களுக்கு இடமாவதாலும் அரிசியின் சத்தைப் பற்றி நாம் தெளிவாய்த் தெரிந்திருக்கவேண்டியது அவசியமாகிறது. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னதாகவே ஆலை யரிசியை

புண்பதால் தவிட்டான் நோய் உண்டாகிற தென்று கீழ் நாடுகளில் தெரிந்திருக்கின்றனர்.

நெல்லை ஆலையிலரைத்து அரிசியின் சத்தைக் குறைக்காதிருந்தாலுமே, அரிசி யுணவிற்குச் சில குறைகளுண்டு. இலேசாக அரைக்கப்பட்ட அரிசியைக் காட்டிலும் அதிக மாக அரைக்கப்படும் அரிசியில் பி,உயிர்ச்சத்து அதிகமாகவே குறைகிறது. இந்தக் குறைவே தவிட்டான் நோய்க்குக் காரணமாக இருக்கி றது. நெல்லை அவிப்பதால் அரிசியின் மேல் பாகத்திலுள்ள சத்துக்கள் அரிசிக்குள்ளும் இறங்குகின்றன; அரிசியோடு கொஞ்சம் நெருக்கமாகவும் ஒட்டிக் கொள்ளுகின்றன. அதை ஆலையிலரைத்த போதிலும், பச்சை நெல்லின் அரிசியிலுள்ள சத்துக்கள் கழிகிற மாதிரியாகக் கழிவதில்லை. ஆகையால்தான், 'ஆலையில் நெல்லை அரைப்பதில், இலேசாக அரைக்கப்படவும் வேண்டும்; அப்படி அரைக் கப்படும் நெல் அவித்த நெல்லாகவுமிருக்க வேண்டும்' என்று பிரசாரம் செய்யப்படு கிறது. கைக்குத்தரிசியே சிறந்ததென்றிருந்த போதிலும், நம் மாகாணத்தில் ஆயிரக்கணக் கான அரிசியாலைகள் இருந்து வருவ தாலும் இன்னும் நூற்றுக்கணக்கான ஆலைகள் வருடா வருடம் புதிதாக உண்டாகி வருவதா லும் அவற்றை யொழிப்பதும் சிரமமென்று கருதப்படுகிறது. நெல்லை யவித்தல் நம் நாட் டில் காணப்படுவதன்றி, நெல்லே முக்கிய உணவாக இருக்கிற சீனாவிலும் சப்பானிலும் காண்பதற்கில்லை.

Health Bulletin No. 28.

(தொடரும்)

ஆ. நாட்டு வைத்தியம் மிருகவாகடம் பாகமுறை சுகாதாரக் குறிப்புக்கள்.

மேகமணு காது வெகுத் பனமாகுந்
தேகமதில் மூலமுளை சேராதே—போகாச்
சுரதோடம் போங்கரப்பான் றேன்றும் வனத்திற்
பாவுகரணைக் கிழங்காற் பார்.

(அகத்தியர் குணவாகடம்.)

மேகம் அணுகாது. வெகு தீபனமாகும் (பசி யுண்டாகும்) தேகமதில் மூல முளை சேராது. போகாச் சுரதோடம் போ(கு)ம். கரப்பான் தோன் றும். வனத்திற் பரவு(ம்) கரணைக் கிழங்கால் பார்.

கரணைக் கிழங்கில் 69.9 சதம் ஈரமும் 1·4 சதம் பிசிதமும் (Protein) ·1 சதம் கொழுப் பும் 1·6 சதம் கனியப் பொருள்களும் 27 சதம் கரிநீரகைப் பொருள்களும் (Carbohydrates) .06 சதம் சுதையமும் (Calcium) ·02 சதம் எரி யமும் (Phosphorus) 1·3 சதம் கீழாயிரச் சிரெடை இரும்புமிருக்கின்றன. 100 சிரெடை யில் 115 கனலியும் (calories) உண்டாகும்; சர்வதேச அலகின்படி 34 பி 1 உயிர்ச்சத்தும் கிடைக்கும்.

Health Bulletin No. 23.

2. கம்பங் கொழுக்கட்டை: சுத்தம் செய்த விளைந்த ஒருபடிக் கம்பை அரைக்கால் வீசம் நல்ல வெல்லம் ஒரு மூடித் தேங்காயு டன் ஒன்று சேர்த்தரைத்து, சுமாரான கட் டிப் பதத்தில் வீசம் படி எள்ளு அரைக்கால் படிப் பொட்டுக்கடலை ஆகியவற்றைக் கலந்து, கொழுக்கட்டை பிடித்து ஆவியில் வேகவைத் துக் கொள்ளவும்.

பண்டிகை பலகாரத் திரட்டு.

3. குழந்தை முதன் முதல் முப்பத் தொன்பதாம் நாள் சிரிக்க ஆரம்பிக்கிறது; உணவைப் பக்கத்தில் கொண்டுவரப்படுவ தைப் பார்க்கிற மகிழ்ச்சியால் அது சிரிக்கிறது. இரண்டாம் சிரிப்பு, பத்துவாரங்களானதும் ஏற்படுகிறது; அப்பொழுது தாய் தகப்பனர் சிரிப்பதைப் பார்த்துத் தானும் சிரிக்கிறது; அதே காலத்தில், கூச்சம் காட்டினால் சிரிப்பதாகவும் சிலர் சொல்லுகிறார்கள்.

SUPPLEMENT to 1941-February Issue "Grama Dhoothan".

கிராம தூதன்

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை

மலர் உ

1940

கௌரவப் பத்திராதிபர்

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை,

ஸ்ரீவில்லிபுத்தூர்.

பிரசுரகர்த்தா

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

மதுரை.

விலை ரூ. 1-4-0.

கிராம தூதன்
1940-ம் வருடத்திய மலரின்
பொருளடக்கம்.

1. கடவுள் வணக்கம் : பிரார்த்தனை.

உமறுப் புலவர் 1.
தேசிக விநாயகம் பிள்ளை 33.
தாயுமானவர் 65, 193.
நம்மாழ்வார் 97.
இராமலிங்க சுவாமிகள் 129.
நல்வழி 161.
மாணிக்க வாசகர் 225.
இராமலிங்கம் பிள்ளை 257.
இலக்குமண பிள்ளை 289.
சுவாமி விபுலானந்தர் 321.
பெருந்தொகை 353.

2. பொன்னுரைகள் : பொறுக்குமணிகள்.

திருமந்திரம் 2, 98, 130, 162.
சுத்தானந்த பாரதியார் 2, 258, 322.
சுகவனம் சிவப்பிரகாசன் 2, 34.
நரிவெரூஉத் தலையார் 34.
அகமே புறம் 34.
கலித்தொகை 66.
வீரமாமுனிவர் 66.
பாரதியார் 66, 226.
Lord Shaftes bury 98.
படியாதவர் படும் பாடு 98.
Nallasami Pillai 130.
சுவாமி விவேகானந்தர் 130.
உமாமகேசுவரம் பிள்ளை 130.
Cordinal Newman 162.
நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை 162.
தேசிக விநாயகம் பிள்ளை 194.
அவினாசிலிங்கஞ் செட்டியார் 194.
தண்டபாணி தேசிகர் 194.
பி. தி. சீனிவாசய்யங்கார் 226.
மார்க்க அரேலியர் 258, 322.
திருவாட்டி செல்லையா பிள்ளை 258.
நாலடியார் 290.
காந்தியடிகள் 290.
மணி இளங்கோ 290.
ஆம்பூர் பார்த்தசாரதி அய்யங்கார் 322.
புறநானூறு 354.
ஓர் அமெரிக்கத் தலைவர் 354.
ஞா. தேவநேசன் 354.
அரிமா நோக்கு 3.

3. விவசாயம்.

நெல் 4, 35, 67, 99, 131, 163, 195.
களர் நிலங்களைப் பண்படுத்திய முறை 227.
மா மொட்டு ஒட்டல் 259.
நெற் பயிருக்கு உரமிடுவதற்குத் தக்கதாக விருத்தி 291.
பண்ணை பெரு 323.
கத்தரி 355.

4. கூட்டுறவு.

நிலங்களை ஒன்று சேர்க்கும் கூட்டுறவுச் சங்கம் 6.
உத்தமபாளையம் மேற்பார்வை யூனியன் 37.
ஐரோப்பாவில் கூட்டுறவு 70.
சென்னைக் கூட்டுறவுச் சங்கங்கள் 38-39, 101, 133, 165, 147.
உடுப்பி மகாநாட்டுத் தலைமைப் பிரசங்கம் 230.
பம்பாய் பலநோக்கச் சங்கங்கள் 263.
சென்னைக் கூட்டுறவு விசாரணைக் கழக அறிக்கை 293, 324, 356.

5. கல்வி.

கிராமக் கல்வி 9.
பிலிப்பைன் முதியோர் கல்வித் திட்டம் 40, 72.
ஹெஸ்கத் கழக அறிக்கை, பம்பாய் 104, 136, 168, 199.
புத்தகங்களெங்கே? 235.
பிலிப்பைன் முதியோர் கல்வி யறிக்கை 265.
பிலிப்பைன் கல்விமுறை-கல்வியிலாகா அறிக்கை 295, 327, 360.

6. அ. சுகாதாரம் : குடும்ப வாழ்க்கை.

சுகத்திற்காக உண்க 10, 42, 74, 106, 139, 171.
நீங்கள் அறுபது வயதுக்கும் அதற்கு மேலும் சுகமாக வாழவிரும்புகிறீர்களா? 202.
கண்பார்வை 237.
உணவு முறை 269, 297, 331, 363.
ஆ. நாட்டு வைத்தியம் மிருகவாகடம் பாகமுறை சுகாதாரக் குறிப்புக்கள் 78, 107, 140, 174, 204, 238, 271, 301, 334, 365.

7. கிராம வாசிகள் : விபசாயிகள்.

கிராமச் சீரமைப்பு 12.
தஞ்சை ஜில்லா போர்டாரின் திருத் தொண்டு 44.
கிராமாபிவிருத்தி வேலைகளில் பெல்ஜியம் வழிகாட்டுகிறது 79.
பிரிட்டனின் விபசாயச் சட்டங்கள் 109.
தேரூர் கிராம முன்னேற்ற வேலைகள் 142.
மலைவளமும் வேளாண்மையும் 176, 206.
வெளிநாட்டரிசிக்கு நெல்லுக்கு பாதுகாப்பு வரி விதிக்கவேண்டும் 240.
கிராமத் திருத்தவேலை யனுபவங்கள் 273.
புத்துயிரளித்தல் 301.
விபசாயிகளும் கூட்டுறவும் 336.
சிறந்த பயிரிடுமுறை 366.

8. குறைகள் நீக்கம்.

நம்முடைய விபசாயம் விருத்தியாக வேண்டாமா? 15.
நம் நாட்டுப் பலவேறு சமூகங்களும் ஒற்றுமையாகவேண்டாமா? 52.
வாசிங்டன் காட்டியவழி 82, 111, 144, 179, 209, 243, 277, 303, 339, 370.

9. கதை சரித்திரம்.

ககவா பண்டிதர் 19, 58, 84, 113, 181, 147, 211, 245, 278.
பொறிதானே என்று பராமுகமாக இருக்கப் போக வீடே வெந்து போயிற்று 303, 342, 373.

10. கைத்தொழில்: குடிசைத் தொழில்.

பழங்களுக்கு இனிப்பேற்றல் 21, 60, 86.
சென்னை மாகாணக் கைத் தொழில்கள் 116, 150.
குடிசைத் தொழில்கள் 184.
முத்திரை அரக்குச் செய்முறை 213.
மெருகெண்ணெய் செய்தல் 248.
நெல் குத்தும் எற்றம் 281, 309.
திருத்தமுறை நெசவு 344.
வாழை மா 376.

11. செய்தித் திரட்டு.

அ. விபசாய வியாபாரச் செய்திகள் 22, 61, 88, 117, 153, 187, 215, 250, 282, 309, 345, 376.
ஆ. கிராமப் புனருத்தாரண தலதாபனச் செய்திகள் 23, 62, 117, 153, 187, 217, 251, 284, 310, 378.
இ. கூட்டுறவு கல்வி சுகாதார குடும்பச் செய்திகள் 23, 62, 120, 155, 188, 220, 252, 285, 311, 378.
ஈ. கூட்டச் செய்திகள். 24, 123, 255, 286.

12. அறிவுரைத் திரட்டு.

25, 63, 92, 128, 156, 188, 221, 255, 286, 312, 347, 379.

பஞ்சாங்கம், கால்நடைச் சந்தைகள், விபசாயக் கண்காட்சிகள், புத்தகங்கள், பத்திரிகைகள், அறிக்கைகள் வரவு, மதிப்புரை (உட்பக்கங்களிலும் அட்டைகளிலும்)

பன்னிரண்டு வாரங்கள் ஆனதும், பிரகாச மானதும் மனத்தைக் கவரும்படியானதுமான ஒரு பொருளைப் பார்த்தால், அது சிரிக்க ஆரம்பிக்கிறது. பிறகு ஆறு வாரங்கள் ஆன தும், அதாவது குழந்தைக்குப் பதினெட்டு வாரங்கள் ஆனதும், வயது முதிர்ந்தவர்கள் சிரிப்பதுபோல முதல் முதல் சிரிக்க ஆரம்பிக்கி றது. இச்சிரிப்பு, வேதனையற்ற அதிர்ச்சி ஆச் சரியம் முதலியவற்றால் உண்டாகிறது. ஆறு மாதங்கள் ஆனதும் குழந்தை அடிக்கடி சிரிக்க ஆரம்பிக்கிறது. குழந்தையைப் போல் நடித் துக் காட்டியும், அது சொல்லுவதுபோல் சொல்லியும், அது பேசுகிறதுபோல் பேசியும் விளையாட்டுக் காட்டுவதால் அச்சிரிப்பு உண் டாகிறது. ஏழு மாதங்களானதும் சாதுரிய மான ஆச்சரியங்களைப் பார்த்து முதன் முதல் சிரிக்க ஆரம்பிக்கிறது; உதாரணமாக, தகப்ப னர் பொய்க்குரலால் பேசுதல், தெரிந்த மனி தர் வருதல், அவர்களைப் பார்த்தால் ஆகிய காரணங்களால் ஏழாம் மாதத்தில் சிரிக்கும். எட்டு மாதத்திற்கு மேல் பன்னிரண்டு மாதம் வரையில், தான் எழுந்து நிற்றல் முதலியன வற்றைக் குறித்துத் தானே மகிழ்ந்து சிரிக்கி றது. கடைசியாக, குழந்தை ஒரு வருடமான தும், சிரிப்புக்குப் பத்தாவது காரணம் ஏற்படு கிறது; அதாவது மற்றவர்கள் சங்கடப்படுவ தைப் பார்த்துக் கொஞ்சம் சிரிக்கிறது. இது வயது முதிர்ந்தோர்களிடமும் ஒரு முக்கிய காரணமாகத் தென்படும்.

(நல்வழி)

---

8. கிராமவாசிகள்: விபசாயிகள்.

விபசாயம் மிச்சந்தரும் முயற்சியாகுமா?

விபசாய முயற்சிக்கு நிலப்பரப்பே முக் கியம்; பிற முயற்சிகளெல்லாம் சுருங்கிய இடத்திலும் காலத்திலும் திரும்பத்திரும்ப வும் செய்யப்படலாம். விலைவாசியை யெண் ணிப் பயிரிட்ட மகசூல் களம் வந்துசேருமுன் விலை விழுந்தும் போகலாம்; பிற முயற்சிகளை யெல்லாம், பிரியம் சௌதம் போல் கூட்டவும் குறைக்கவும் செய்யாமலே நிறுத்திக்கொள்ள வுங் கூடும். பிற முயற்சிகளெல்லாம் விபசாய விளைவையும் சுரங்கத்தையும் பொறுத்தன வாக இருப்பினும், அவை மழை பனி வெய் யில் காற்று முதலியனவற்றால், அவ்வளவாகப் பாதிக்கப்படுவதில்லை, விபசாயமோ அதிக மழையாலும் காலந்தப்பிய மழையாலும் கெடுவதற்கும் அதிகமாகவே மழையின்மை யாலுங் கெட்டுப்போகக்கூடும்; தயர்ந்து பல மாதங்கள் மழையில்லாது போனால், கிணற்றி றைவைச் சாகுபடியும் செய்து கொள்ள முடி யாது போய்விடும்; வானவாரிச் சாகுபடியைப் பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. பிற முயற்சி கள் சரியாக நடைபெறுதபோது, அவற்றைச் சார்ந்திருப்பவர்களும் விபசாயத்தையே சாரு கின்றனர். விலைவாசி சௌகரியமாக இல்லை யென்று நிலங்களைக் காலியாகப் போட்டா லும் அவை பின்னும் அதிகமாகக் கெட்டுப் போகின்றன: நம்மில் 75 சதமானத்திற்கு மேல் விபசாயத்தையே சார்ந்திருப்பதால், அப்படிக் காலிபோடுவதால் நம்முடைய வேலை யில்லாத் திண்டாட்டமும் தாங்கமுடியாது போய்விடும். நமக்கு இன்றியமையாத உண வும் உடையும் விபசாய மின்றிக் கிடைப்பதற் கில்லை யாதலால், மிச்சமில்லா திருந்தாலும் செய்தே தீரவேண்டியதாக முடிகிறது. இப் படியாக, விபசாயம் பிற முயற்சிகளுக்குள்ள சௌகரியங்களு மில்லாதும் பிற முயற்சிகளுக் கில்லாத அசௌகரியங்களுமுடையதாக இருப் பினும் செய்து தீரவேண்டியதாயிருக்கும் நிலை மையில், அதைக் கூடியவரை மிச்சந்தரக்கூடி யதாகச் செய்ய, சோம்பாதும் சலியாதும் தீவிரமாகவும் கவனமாகவும் உழைக்கவும்

அதன் பயனைக் கட்டுப்பாடாகப் பெறவும் முயற்சிக்கவேண்டியது அதிக அவசியமாகிறது.

விபசாய விளைவு செலவழித்த செலவிற்கும் காணாது போகக்கூடுமாதலால், தனிவிபசாயமும் மிச்சந்தரக் கூடும் சந்தர்ப்பங்கள் எவையென்றும் நாம் தெரியவேண்டும். விபசாயத்தில் மிச்சமில்லாத காலத்திலும், அந்தக் குறையை நாமெப்படி நீக்கிக்கொள்ளலாமென்பதையும் தெரியவேண்டும். பணம் கொடுத்தே வாங்கக்கூடிய பிற தேவைகள் நமக்கு அவசியமாவதற்குத் தக்கதாக, நம்முடைய வாழ்க்கையை விபசாய விளைபொருள்களின் விலைவாசியும் வெகுவாய்த் தாக்கும். அதைத் தவிர்த்துக்கொள்ளுவதற்கும் நம் விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கும் அரசாங்கத்தின் உதவியும் நமக்கு வேண்டும்.

பிற முயற்சிகளில் பல கூலியாட்களை வைத்து வேலை வாங்கும் நிருவாகத் திறமையினாலும் மிச்சம் காணமுடியும். விபசாயத்தில் தானும் தன் குடும்பத்தாரும் பாடுபடக்கூடிய அளவிற்கும் அதிகமான வேலையிருக்கும் காலத்தில் மட்டும் கூலியாட்களை வைத்து வேலை வாங்கும் திறமை பயன்படக்கூடுமேயன்றி, மற்றப்படி அதனால் பயனிருக்கக் கூடியதில்லை.

பலவேறு வயதினரும் ஆண் பெண் இருபாலாரும் நெசவுத்தொழிலில் ஈடுபடுவது போலவே, விபசாயத்திலும் ஈடுபடலாம்; ஆகையால், விபசாயமும் குடும்ப முயற்சியாக இருக்கலாம். நடைமுறையிலிருக்கும் முயற்சிகளிலெல்லாம், விபசாயம் மிகுந்த புத்திக் கூர்மையும் சலியா உழைப்பும் வேண்டியதாக இருக்கும் ஒரு சிக்கலான முயற்சியாக இருப்பினும், வேறு முயற்சிகளின் போக்கெல்லாம் வேறுவிதமாகவே இருப்பதினால், விபசாய வேலைகளிலீடுபடுபவர்கள் அதை ஒட்டியதும் அதனோடு நெருங்கிய சம்பந்தமுள்ளதுமான பிற தொழில்கள் செய்யக்கூடுமேயன்றி, மற்றப்படி எந்தத் தொழிலுஞ் செய்து காலங் கழித்துக்கொள்ள முடியாது. ஆகையால், விபசாயத்திலீடுபடும் ஒவ்வொரு குடும்பமும் அதில் பூரணமாகவும் ஈடுபடவேண்டும். அப்படிக்கில்லையேல், நல்ல மழையும் விளைவும் விலைவாசியும் இருந்தபோதிலும் குடும்பச் செலவுக்குப் போதிய அளவுகூடச் சம்பாத்தியம் காணமுடியாதுபோகும்.

அதிக நிலமிருப்பதால், விபசாயத்தில் அதிக விளைவும் மிச்சமுமிருப்பதில்லை. அதிகமாகப் பயிரிடக்கூடிய நிலம் புதிதாகத் தோன்றிவிடக்கூடியதுமில்லை. பூமியின் பரப்பும் முன்னிருந்தபடியே யிருக்குமே யன்றி, நருள் பெருகுவதற்குத் தக்கதாக விரிந்துவிடுவதில்லை. நம் மாகாணத்தில் மூன்று கோடியே இருபது இலட்ச ஏக்கர் நிலங்கள்தான் இப்பொழுது சாகுபடிக்கு இலாயக்காயிருக்கின்றன. இனி, சாகுபடிக்கு இலாயக்காகத் திருத்தக்கூடிய காடுகளும் தரிசு நிலங்களும் அதிகமாகவும் இல்லை. இந்த நிலைமையில், ஐந்து பேரடங்கிய ஒரு குடும்பத்திற்குச் சராசரி $3\frac{1}{2}$ ஏக்கர் நிலமும் வரக்கூடியதில்லை. சராசரி யளவிற்கும் அதிகமாக, சில பல குடும்பங்களுக்கு நிலங்களதிகமாகும் போது, மற்றக் குடும்பங்களுக்கு நிலங்கள் குறைந்தும் இல்லாதும் போகவேண்டியது வரும். நருள் பெருக்கம் ஒரு சதமானம் வருடாவருடம் கூடிவரும் போது அதற்குத் தக்கதாகவும் அதிகமாக விளைவைப் பெருக்கி வந்தாலன்றி விபசாயத்தில் நாம் மிச்சம் காணமுடியாது.

ஒருவரிடம் பத்தேக்கர் நிலமிருக்கும் போது 100 கோட்டை நெல் விளைகிறதென்றால், 20 ஏக்கர் நிலமிருக்கும் போது 150 கோட்டைக்கு மேலும் 40 ஏக்கர் நிலமிருக்கும் போது 200 கோட்டைக்கு மேலும் காண்கிறதில்லை; 50 ஏக்கர் நிலமிருந்தாலும் 200 கோட்டை வரவோடேயே நின்று போகிறது. இப்படியே,நாம் நம் அனுபவத்தில் காண்கிறோம். இன்னொரு வகையாகவும், நாம் பார்க்கலாம். 50 ஏக்கர் நிலத்தை 3 பேர் தனித்தனி பிரித்

தப் பாடுபடும்போது 500 கோட்டை விளைந்தால், 4 பேர் பாடுபடும்போது 550 கோட்டையும், 6 பேர் பாடுபடும் போது 600 கோட்டையும், 12 பேர் பாடுபடும் போது 650 கோட்டையுமே விளையக் காண்கிறோம். இவற்றிலிருந்து, சுமாரான நிலத்திலும் அதிகப்படியான ஆள் தீவிரமாகப் பயிரிடும் போது காணும் விளைவு அதிக நிலத்திலும் காண்பதில்லை யென்பதாகத் தெரியலாம். ஆகவே, சராசரி கிடைக்கக்கூடிய நிலத்தில் தீவிரமாகப் பாடுபடுவதே (Intensive cultivation) மிச்சந் தருவதற்கு ஏதுவாகும்.

தழைகுழை சத்துக்களையும் அடித்துக் கொண்டுவரும் கால்வரத்துத் தண்ணீர் பாயும் தீரவாசங்களில் அதிக உரச்செலவில்லாத காரணத்தால் மிச்சம் அதிகமாகவும் இருக்கக்கூடும். இறைவைச் சிரமமில்லாமல் நெல் விளைகிற காலத்திலும் அந்தக் காலத்தை வேறு வகையாகப் பயன்படுத்திக்கொள்ளாத நிலைமையில், மிச்சமிருந்தாலும் கொஞ்சமாகவே யிருக்கக் கூடும். கரும்பு வாழை கொடிக்கால் சாகுபடி நீண்ட காலம் துயர்ந்த முயற்சிக்கு இடம் தருவதினால் மற்றப் பயிர்களைக் காட்டிலும் அதிக மிச்சந்தரவுங் கூடும்; விலைவாசிகள் சௌகரியமாக இருந்தால் திருப்திகரமான மிச்சமும் அமையக்கூடும். பருத்தி, புகையிலை, மிளகாய், நிலக்கடலை, ஈருள்ளி, எள்ளு முதலியனவற்றுலும் விலைவாசியால் சாதாரணமாக மிஞ்சுவதிலும் அதிகம் மிஞ்சக்கூடும்.

விபசாய மிச்சத்திற்கு நுண்ணிய விஞ்ஞான அறிவையும் கவனமாகக் கையாள வேண்டியதிருப்பது போலவே, விதைப்பதிலும் நடுவதிலும் மற்றும் பருவங்கள் செய்வதிலும் பின் அறுத்து அடிப்பதிலும் கணக்குப் பார்த்துச் செட்டாகச் செலவழிக்க வேண்டியதும் அவசியமாகும். விலைவாசிக் கேற்பச் சேர்க்கை உரங்களிடுவதையும் மாற்றவும் குறைக்கவும் இடாமல் நிறுத்திக் கொள்ளவும் வேண்டும். இறைவைக்கு மாடுகளுமிருக்க நீராவி எண்ணெய் இயந்திரங்களையோ மின்சார சத்தியையோ அதற்காக உபயோகிப்பதும் அதிகச் செலவாக முடிந்து நட்டத்திலும் கொண்டுபோய் விடக்கூடும்.

விபசாயிகளொவ்வொருவரும் கறவைப் பசுக்களும் எருமைகளும் ஆடுகளும் கோழிகளும் தங்கள் விபசாயத் தொழிலுக்கும் பாதகமில்லாமலே வளர்த்து வரலாம். மாதம் ஒரு ரூபாவுக்குக் குறையாமல் கோழிகள் வளர்ப்பதிலும் நாலைந்து ரூபாவுக்குக் குறையாமல் ஆட்டுக் குட்டிகள் வளர்ப்பதிலும் நாலைந்து ரூபாவுக்கும் அதிகமாகவே கறவைப் பசுக்கள் எருமைகள் வளர்ப்பதாலும் மிச்சமடைந்து வரலாம். ஆட்டுக்குட்டிகளை மேய்த்துவரச் சௌகரிய மில்லாதவர்களும் ஆடு கோழி வளர்க்க அருசை கொள்ளுகிறவர்களும் கறவைப்பசுக்கள் எருமைகளேனும் அவசியம் வளர்த்து வர வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு ஏர் மாடேனும் வைத்திருக்க வேண்டும். நெல்லு நமக்கானால், வைக்கோல் அதற்காகும். பூராவும் பண ஏர் கொண்டுழுவதென்றால், அம்மட்டில் அதிகச் செலவேயாகும். சொந்த மாடிருந்தால், அவசியமான அளவிற்குப் பண ஏரும் பிடித்துக் கொண்டு, நிலங்களைக் காலாகாலத்திலும் உழுதுகொள்ளலாம்; இறைவை அவசியமிருந்தால் அதற்குமுதவும். பிறருக்குக் கூலிக்கு உழப்போயும் இறைக்கப் போயும் சம்பாத்தியம் செய்யலாம். பாரவண்டிகள் வைத்திருந்தால், தங்கள் நிலங்களுக்குக் குப்பை குழையைக் கொண்டு போய்ச் சேர்க்கவும் உதவும். விளைந்த நெல்லை, தானியங்களை, தாளை வைக்கோலை வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்க்கவும் உதவும். தனக்குச் சொந்த வேலை யில்லாதபோது பிறருக்கு வாடகைக்கும் வண்டியடிக்கலாம். மற்றப்படிக்கும் விபசாயகாலத்தில் சாவகாசமான நேரங்களை வீணாகப் போக்காது விபசாய வேலைகளுக்குதவக்கூடிய கூடைகள் முடையவும் கயறுகள் திரிக்கவும் செய்யலாம்; அதிகப்படியாகவும் செய்யச் சாவகாசமிருந்தால், அவ்வாறேசெய்து விற்கவும் செய்யலாம். விபசாய வேலைக்காலங்க

ளில் அதிக வேலையில்லாத கட்டட வேலைக்காரர்களும் கட்டிபானை வனைபவர்களும் செங்கலறுப்பவர்களும் மற்றவர்களும் விபசாய வேலைகளில் கலந்துகொள்ளுவதுபோல, விபசாய வேலையில்லாது கட்டடவேலை அதிகமாக நடக்கிற காலத்தில் விபசாயிகள் அப்படிவேலைகளிலும் கலந்துகொள்ளலாம். வண்டி வைத்திருப்பவர்கள் வியாபாரிகளுக்குதவியாக வண்டியடித்தும் சம்பாத்தியம் செய்யலாம். இப்படியாக, விபசாயவேலை யில்லாத காலத்தையும் வேலையுள்ள காலத்திலும் சாவகாசமுள்ள நேரத்தையும் வீண்போக்காது பிறதொழில்களிலும் ஈடுபடவேண்டும். எந்தத் தொழிலும் வேலைசெய்த நேரத்துக்கே கூலிகிடைப்பதாயிருக்க, விபசாயத்தில் வேலைசெய்யாத நேரத்திற்கும் கூலி கிடைக்கக்கூடியதில்லை; வேலை செய்யாத பேருக்கும் விபசாயம் சோறுபோடக் கூடியதில்லை.

நம் நாட்டுத் தேனீ அரைமைல் தூரத்துக்கு மேல் போய் மதுரமும் மகரந்தமும் எடுத்து வரக்கூடியதில்லை; இந்த அரைமைல் தூரத்திற்குள் பன்னிரண்டு மாதமும் இவை கிடைக்கவேண்டும். அப்படிக்கிடைக்குமிடத்திலும், படித்தவர்கள் பணமுள்ளவர்கள் போதிய சாவகாசமுள்ளவர்களாக இருந்தால், பொழுதுபோக்காகத் தேனீ வளர்த்து வரலாமேயன்றிச் சம்பாத்தியத்திற்காக அதுவும் சமுசாரிகள் வளர்த்துக் கொள்ளக் கூடியதில்லை. தேனீ வளர்ப்பது அத்தனை சிரமமானதில்லை யென்றாலும், நித்தம் அவற்றைக் கவனித்துவரச் சமுசாரிகளால் முடியாது. விபசாய வேலைகளெல்லாம் கொஞ்சமும் தாமசிக்காதபடி அததற்குச் சௌகரியமான நேரத்திலேயே செய்யப்பட வேண்டியதாய் நேருமாதலால் அவற்றைவிட்டுவிட்டு ஓடிப்போகிற தேனீக்களைப் பிடித்து வரவோ மற்றப்படிக்கான சௌகரியங்களை அவற்றிற்குச் செய்துகொண்டிருக்கவோ முடியாது. தோப்புத்துரவுள்ளவர்கள் காய்களை பழங்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வெளியூர்களுக் கனுப்பியும் ஊறுகாயாக முறப்பாவாகச் செய்தும் விற்பார்களென்றால், அவர்கள் அதனால் அதிக மிச்சமும் காணமுடியும்.

கூடுமானபோது, விபசாயிகளின் குடியிருப்பும் விபசாய நிலங்களிலேயே யிருக்கலாம். பிரிந்தே, ஊருக்குள்ளிருந்தாலும் வீட்டின் காலியிடங்களில் செடிகொடிகள் கீரைகளையும் பயிர்செய்து வரவேண்டும். நிலங்களிலும் ஏதேனும் ஒரு பயிராகச் சாகுபடி செய்வதாக இல்லாமல் உணவிற்கும் தீவனத்திற்கும் வேண்டிய பயிர்களும் காய்கறிச் செடிகளும் பயிரிடப் படவேண்டும். வியாபாரப் பயிர்களும் மற்ற விதமான பல பயிர்களும் பல பாகங்களிலும் மாற்றிமாற்றிச் சாகுபடி செய்துவருவதோடு எந்தக் காலத்திலும் நிலத்திலெதாமொருபாகம் காலியாயிருந்து நிலம் ஆறிவரவும் வேண்டும். கமலைக்குழியிலும் மற்றும் சாத்தியமான இடங்களிலும் குழைக்கும் விறகுக்கும் உதவக்கூடிய மரங்களும் வைத்துண்டு பண்ணிவரவேண்டும். குப்பை கூளத்தையும் கோமயம் சாணத்தையும் வீட்டிலும் காட்டிலும் வீணாக்காது சேர்த்து நிலத்திற்கு உரமேற்ற வேண்டும்.

நம் நாட்டின் நருள் பெருக்கிற்குத் தக்கதாக விளைவின் பெருக்கமும் இருந்து வந்தாலன்றி மிச்சங்காண்பதும் அரிதாகும். பத்து சதமான முதல் 30 சதமானம் வரை அதிக விளைவைத் தரக்கூடிய பல திருத்த முறைகள் இன்னும் கையாளப் படாதிருப்பவை கையாளப்படவேண்டும்.

பங்கு பாகமும் தச கூலிச்செலவுகளும், தானியங்களும் மற்றும் விளைபொருள்களுமாக இருக்குமாயின், அம்மட்டில் விபசாயிகளுக்கு விளைபொருள்களைச் சீக்கிரம் விற்கவோ அல்லது கடன் வாங்கவோ வேண்டிய அவசரமும் வட்டி கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தமும் நேராது. கூலியும் செலவும் கூடியவரை நிதானமாகவும் இருக்க முடியும்.

இப்படியாக, வரவினம் ஒவ்வொன்றிலும் அதிக வரவைக் கண்டும், செலவினங்களை

நிறுத்தியும் குறைத்தும், திருத்தமான முறைகளைக் கையாண்டும், சோம்பாதும் சலியாதும் கவனமாகவும் தீவிரமாகவும் நாம் உழைத்து வருவதோடு, நல்ல விலைவாசி கிடைப்பதற்கும் அரசாங்க சட்ட திட்டங்களும் கடன் விற்பனைக் கூட்டுறவுச் சங்கமும் உதவவேண்டும். விவசாய வேலைகளுக்காகக் கடனேதும் வேண்டியிருந்தாலும் அப்படி வேண்டியிருக்கும் தொகையையும் குறைந்த அளவாகவே வாங்கிக் கூடிய சீக்கிரமே திருப்பிக் கொடுத்து விடவும் வேண்டும். ஏகதேசமே உதவக்கூடிய விவசாயக் கருவிகளையும் இயந்திரங்களையும் அந்தச் சங்கத்தின் மூலமாகவே வாடகைக்குப் பெற்று உபயோகித்துக்கொள்ளவேண்டும். நல்ல விதைகள் உரங்கள் வெளியிடங்களிலிருந்து வாங்கவேண்டியிருந்தாலும் மொத்தமாகப் பல உறுப்பினர்களும் சேர்ந்து வாங்கிக் கொள்ளுவதின் மூலம் செலவைக் குறைத்துக் கொள்ளவும் வேண்டும். அரசாங்கச் சௌகரியங்களைப் பெறுவதற்காக வேறொரு அமைப்பிருந்தால் அதன் மூலமும் மற்றப்படி கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இப்படியாக நடந்து வந்தால், வரவும் திட்டமாக அதிகமாகும்; செலவும் குறையும்; நல்ல மிச்சமும் விவசாயத்தில் காணமுடியும். பௌதீக சேதம் நேரினும், நஷ்டம் அதிகமாகாது.

---

9. கதை: சரித்திரம்

கூறுகெட்ட குப்பான்

[ஒரு தால்சுடாய் கதை: தமிழ் நாட்டிற்கேற்பச் சற்றே மாற்றியது.]

III

நல்ல தம்பி, உழாமல் பாக்கியிருந்த வாலத்தை உழுவதற்காக மறுநாள் போனான். வயிறு வலித்துக் கொண்டிருந்தாலும் உழவைப் பாக்கி போடப் பிரியமில்லை. மாடுகளை ஏரில் பூட்டி ஒரு சாலும் அடித்துத் திருப்பினான். கலப்பை நகரமாட்டேனென்றது. இதென்னடா சங்கடமென்று பார்த்தான். குறளி கொழுவைச் சுற்றிப் பிடித்திருந்தது. அது வேர் சுற்றியிருப்பது போல, அவனுக்குத் தோன்றியது. அந்த நிலத்திலேயே எங்கும் வேர் கிடையாதே, இந்த வேர் எங்கிருந்து வந்ததென்று கூர்ந்து பார்த்தான்; கையாலும் துழாவினான்; கைக்கு மெதுவாக ஒன்று தட்டுப்பட்டது. அதை எடுத்துப் பார்க்க, கறுப்பாக வளைந்து சுருண்டிருந்தது. அதுதான் அந்தக் குறளியெனக் கண்டான்; கண்டதும் அதைக் கல்லிலெறிந்து கொல்ல, அதனோடு கையை ஓங்கினான். அது கிடுகிடுத்துப் போய் வீரிட்டு அலறியது. என்னைக் கொல்லாதே. உனக்கு என்ன வேண்டுமென்றாலும் நான் செய்கிறேன், என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டது. என்னதான் எனக்கு நீ செய்ய முடியுமென்று கேட்டான். அது திரும்பவும், என்ன சொன்னாலும் கேட்கிறேனென்றது. அவன் தலையைச் சொரிந்து கொண்டே, என் வயிற்றுவலியைத் தீர்க்க முடியுமாவென்று கேட்டான். அது தீர்க்க முடியாமலென்ன, நான் தீர்த்து விடுகிறேனென்று சொல்லி, உழுதிருந்த சாலில்போய் தன் நகத்தால் தோண்டி மூன்று சிறு வேர்களைக் கொண்டுவந்து கொடுத்தது. இதை யார் விழுங்கினாலும் அவருடைய வியாதி தீர்ந்து

போகுமென்றது. அந்த வேர்களிலொன்றைப் பிரித்தெடுத்து விழுங்கினான். வயிற்றுவலியும் நின்றது. அந்தக் குறளியும் நான் போகிறேன், எனக்கு விடைதரவேண்டுமென்று கேட்டது. திரும்ப நீ பூமிக்கு வரவே கூடாது; அப்படியானால் தான் நீ போகலாமென்று சொன்னான். உடனே இனித்தான் பூமிக்கு வருவதே யில்லை யென்று சொல்லிக் கொண்டே பூமிக்குள் ஒரு துளைபோட்டுக் கொண்டு போய்விட்டது. நல்லதம்பி பாக்கியையும் உழுதான்; வீடுவந்து சேர்ந்தான். அங்கே கலிப்பகையும் அவன் மனைவியும் வந்திருக்கக் கண்டான்.

கலிப்பகை தம்பியைக் கண்டதும், 'சேர நாட்டில், என் தலையைக் காட்ட இன்னும் கொஞ்ச நாளைக்கு முடியாது. அதுவரை உன் சவரட்சணையிலிருந்து போகலாமென்று வந்திருக்கிறோம்' என்றான். சரிதான், எவ்வளவு நாளைக்கு வேண்டுமென்றாலும் இருங்களென்று சொல்லிக்கொண்டு எனக்கு இருக்க நேரமில்லை, வேலையிருக்கிறதென்று போய் விட்டான்.

(தொடரும்)

---

10. குடிசைத் தொழில்: கைத்தொழில்

சென்னை மாகாணக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் திட்டம்.

இதுவரை கூட்டுற வியக்கத்தினாலும் மாகாண மத்திய அரசாங்க உதவிகளினாலும் நெசவுத்தொழில் யாதொரு பயனையும் அடைந்ததில்லை. இரண்டு சதமானத் தறிகளே கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்திருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் மாதத்தில் 16 நாட்களே வேலை செய்கின்றனர். இதற்கும் 60 நாள் தவணைக்கு நூல் கடனாகக் கிடைக்க வேண்டியதிருக்கிறது. சென்னையில் நெசவான துணிகளை மடித்து ஒழுங்கு படுத்தும் இயந்திரம் (Calender) சென்ற 1939-40ம் வருடத்தில் 5 நாட்களே வேலை செய்திருக்கின்றன. விற்பனைப் பொருட்காட்சிகளும் மாகாண சங்கமும் பிரதம சங்கங்களும் ஒரு ரூபாத் துணியை விற்க 2 அணா 4 பைசா செலவழித்திருக்கின்றன. இப்படியாக, சரியாக வேலை செய்யாதிருந்துவரும் பிரதம சங்கங்களைப் புதுப்பிப்பதினாலும் பிரயோசன மிருக்கக்கூடியதில்லை.

இனி ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு சம்பள காரியதரிசி நியமிக்கப்பட வேண்டும். கிராமாந்தர சங்கங்கள் ஒவ்வொன்றிலும் 25 தறிகளுக்குக் குறையாதவர்களும் நகர சங்கங்களில் 50 தறிகளுக்குக் குறையாதவர்களும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அவர்கள் தறியொன்றுக்கு 15 ரூபா வீதம் பங்குத்தொகை செலுத்த வேண்டும். இனி, உதவித்தொகை அதிகத்துணி நெய்வதற்குத் தக்கதாகவே சங்கங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்; அதுவும் கூடியவரை சிப்பந்தியின் சம்பளத்திற்கு உதவக் கூடியதாகவே இருக்க வேண்டும். மாகாண சங்கம் பிரதம சங்கங்களின் பங்குத்தொகையை அவர்கள் சம்மதித்தால் (ஆலை முதலாளிகள் சம்மதித்தாலா? இரு திறத்தாரும் சம்மதித்தாலா? ப-ர்.) ஆலை முதலாளிகளுடைய தொகையாலும் பெருக்கிக் கொள்ளப் படும். பிரதம சங்கங்களில் நெய்ய வேண்டிய தரங்களை மாகாணச் சங்கம் திட்டம் செய்யும். வேலைக்குத் தக்கதாகவே கூலியும் தரும். உயர்ந்ததர நூல்கள் இந்த மாகாணத்தில் கிடைக்கவில்லை யென்றால், இந்தப் புதுத் திட்டத்தின்படி தெற்கே சேலம் கோயம்புத்தூர்

இராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களி லும் வடக்கே கடப்பை குண்டூர் கிழக்கு கோதாவரி ஜில்லாக்களிலும் முதலாவதாக வேலை நடத்தப்படும். இந்தச் ஜில்லாக்களிலும் இலேசாக விலையாகக் கூடிய துணிகள் நெய்கிற இடங்களிலேயே முதலாவதாக ஆரம்பிக்கப் படும்.

நெசவுக்கு வேண்டும் நூலும் மற்றச் சாமான்களும் மொத்தமாக வாங்கப்படும். வேலைத் திறமையையும் உள்ளூர் கூலியையும் அனுசரித்து நெசவாளர்களுக்குக் கூலி கொடுக் கப்படும். நித்தக் கூலியாகக் கொடுக்கப்பட மாட்டாது. அடக்கமாகும் கிரயத்தின் மேல் ரூபாவுக்கு அரையணா இலாபமே வைத்து விற்கப்படும். விலையேற்றடி இறக்கடி நிதி யொன்றும் அமைக்கப்படும்.

25 தறியுள்ள சங்கங்களுக்கு 25 ரூபா வும் அதற்கு மேல் மூன்று வருடத்திற்கு உட் பட்ட சங்கங்களுக்கு அதிகப்பட்ட தறி ஒவ் வொன்றிற்கும் ரூபா ஒன்றாகவும் மூன்று வரு டத்திற்கு மேற்பட்ட சங்கங்களுக்கு முக்கால் ரூபா விதமும் எந்தச் சங்கத்திற்குமே மாதம் 60 ரூபாவுக்கு மேற் போகாமலும் உதவித் தொகை கொடுத்து வரப்படும். ஆனால், இந்த உதவித் தொகையைப் பெறுவதற்கும் சங்கம் தறியொன்றுக்கு 15 ரூபாவுக்குக் குறையாத துணி ஒவ்வொரு மாதமும் விற்றிருக்க வேண் டும்.

(இது நெசவுகாரர்களின் நிலைமையையும் போக்கையும் சரியாகத் தெரிந்து கொள்ளா மல் செய்திருக்கும் திட்டமாகத் தோன்றுகி றது. இருந்தாலும், நாம் இன்னும் கொஞ்சக் காலம் இருந்து பார்த்தே அப்படி முடிவாகச் சொல்லலாம். ப-ர்)

---

11. செய்தித் திரட்டு:

அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்.

1. சென்ற அனேக வருடங்களாக, பயிரில் விழும் கம்பிளிப் பூச்சிகளை யொழிக் கும்படி சமுசாரிகளுக்கு விவசாய இலாகா சொல்லியும் வருகிறது. சில ஜில்லாக்களில் விவசாயப் பீடைகள் பூச்சிகள் சட்டமும் அமுலிலிருந்து வருகிறது. என்றாலும், போதனையும் கட்டாயமும் அவ்வளவாக நல்ல பலனைத் தந்ததில்லை.

தங்கள் பயிர்களில் பூச்சிகள் விழுந்தி ருக்க, பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் உட்கார்ந் திருப்பதற்கும் அருத்தமில்லை. ஆகையால், பூச்சிகள் விழும் பிரதேசங்களிலுள்ள நாட் டாண்மைக் கழகங்களை (District Boards) இதற்கான கல்வியிலாகா தலைவரின் அனுமதி யும் பெற்று, ஆசிரியர்களுக்கும் மாணவர் களுக்கும் இரண்டொரு வாரம் மத்தியானத் திற்கு மேல் பூச்சிகள் ஒழிக்கும் வேலையில் தல விவசாய அதிகாரியின் பார்வையில் ஈடுபடச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படும். தல அதிகாரிகள் கோருகிற அவசிய மான தடை வேலைகளைச் செய்யும்படி சமுசாரி களைத் தூண்டுவதும் வேறொருவரும் கவனிப் பதற்கில்லாத தரிசு நிலங்களிலுள்ள முட்டைத் திரளைப் பொறுக்குவதுமே அவர்களால் செய் யப்பட வேண்டிய வேலைகளாகும். பூச்சிகளால் அதிக ஆபத்து நேருவதாயிருக்கும் பட்சத் தில் விவசாய அவசரம் (An Agricultural emergency) எனத் தல விவசாய உதவித்தலை வர் குறிப்பிட்டு நாட்டாண்மைக்கழகத் தலை வருக்கு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தகவல் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள் வதே இது பற்றிக் கையாளுகிற முறை.

இப்படியாக, வட ஆர்க்காடு தென்னார்க்காடு தஞ்சாவூர் ஜில்லாக்களில் ஆரம்பப்பள்ளிகள் மிகவும் மனமுவந்தும் பிரயோசனப் படும் படியாகவும் வேலை செய்து வருகின்றன வெனத் தெரிகிறோம்.

சென்னை விவசாய இலாகாத் தலைவர்.

2. மாட்டுத் தீவனப் பயிர் தனி மகசூலாகச் (sob crop) செய்கிறதாயிருந்தால் மட்டும் நன்செய்க்கு நன்செய்த் தீர்வையும் புன்செய்க்குத் தண்ணீர்த் தீர்வையும் செலுத்த வேண்டுமென்றும் மற்றப்படி வேறு சில நிபந்தனைகளின்படிக்கும் நடந்துகொள்ளுவதென்றால், தீர்வை செலுத்த வேண்டியதில்லையென்று மிருந்து வருகிறது. 'சோள நாத்துத் தவிர மற்றப் பயிர்கள் விதை முற்று முன்னதாகவே நிலத்திலேயே மேயப்பட வேண்டும். அல்லது வெட்டி யெடுக்கப்பட வேண்டும்; சொந்த உபயோகத்திற்காக விளைவிப்பதாயுமிருக்கவேண்டும்' என்று அந்த நிபந்தனைகள் இருந்துவந்தன. தீவனப் பயிர்கள் விருத்தியாகப் பயிரிடப்படவேண்டுமென்ற நோக்கத்துடன் அடுத்த மூன்று பசலிகளுக்கு அந்த நிபந்தனைகளும் இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. எவரும் கினியாப் புல் (Guinea grass) சணல், நேப்பியர் புல் (Napier grass) உலுசார்ண் (Lucerne) யானைப் புல் (Elephent grass) பிலிபேசராப் புல் (pilipesara) உப மகசூலாகத் தீர்வையின்றிச் சாகுபடி செய்துகொள்ளலாம்.

Press Communique No 97.

3. வெல்லப் பாகிலிருந்து (molasses) வெறியை (alchol) எடுப்பதற்காகப் போதனில் 8 இலட்ச ரூபாச் செலவில் ஒரு தொழிற்சாலை அமைக்கப்படும். நைசாம் இராச்சியத்திற்கு வேண்டிய வெறியையில் நாலிலொரு பாகம் இங்கே உற்பத்திசெய்யக்கூடும்.

Imformation Bureau.

4. அரசாங்கத் தோல் பதனிடும் நிபுணர், சொந்தப் பதனிடும் சாலைகளில் சோதனைகள் பரிட்சைகள் மூன்று நாள் ஒரு வித கட்டணமும் வசூல் செய்யாமல் பார்க்கலாம்; அதற்கு மேலும் அதாவது ஒரு வாரம் வரை தாமசிக்கவேண்டியதிருந்தால், பின் நாட்களுக்கு அவருக்குரிய தாமசப்படி (Halting allowance) சாலைக்குச் சொந்தக்காரர் செலுத்தவேண்டும்; அதற்கு மேலும் தாமசிக்க வேண்டியதிருந்தால் செலுத்தவேண்டிய தொகை இன்னதென அரசாங்கம் தீர்மானிக்கும்.

Press Communique No 97.

5. மேற்கு இந்திய தீப்பெட்டிக் கம்பெனியாரின் விலைப் போட்டி, இராமநாதபுரம் ஜில்லாவில் சில்லறையாகத் தீப்பெட்டி செய்கிறவர்களைப் பாதிப்பதாகச் சொல்லப்பட்டது. கிடைத்த புள்ளி விவரங்களிலிருந்து ஒருவித முடிவிற்கும் அரசாங்கம் வரமுடியவில்லை. என்றாலும், கைத்தொழிலிலாகாத் தலைவர் இதனைக் கவனித்து வருவார்; அவசியமானால் அரசாங்கத்திற்கும் அறிவிப்பார்; அதன்மேல், அகில இந்திய விசாரணைக்கும் வேண்டியன செய்யப்படும்.

G. o. 2701 Dev.

6. நூல் நூற்கும் ஆலைகள் 20 நம்பருக்குக் கீழ் உற்பத்தி செய்யாமலிருக்கவும், துணி நெய்யும் ஆலைகள் 20 நம்பருக்குக் கீழ் நெய்யாமலிருக்கவும் ஒரு திட்டத்தைச் சென்னை சர்க்கார் நிபுணர் அமால்சத் சில காலத்திற்கு முன்பு தயாரித்திருந்தார். நூல்நூற்கும் ஆலைகளும் துணி நெய்யும் ஆலைகளும் அன்னிய நாட்டுப் போட்டியிலிருந்து பாதுகாக்கப்பட்ட மாதிரி, கைத்தறிக்காரரும் அவர்களுடைய கைத்தொழிலும் ஆலைப்போட்டி யிலிருந்து பாதுகாக்கச்சட்டமேற்படுத்துவதில் யாதொரு தடையுமிராதென்று நம்பப்படுகிறது.

கூட்டுறவு.

ஆ. கிராமப் புனருத்தாரண தலதாபனச் செய்திகள்.

1. சென்ற ஆகஸ்டு மீ 1௳ யில் கடப்பை சில்லாவில் மரம் நடுநாள் கொண்டாடப் பட்டது. 22033 மரங்கள் நடப்பட்டன. கிராமவாசிகளிலும் மாணவர்களிலும் மரம் நடுவதில் நன்றாக வேலைசெய்தவர்களுக்குப் பரிசு கொடுப்பதற்காக நாட்டாண்மைக் கழகம் (District Board) ரூ 50 அனுமதித்தது. சென்ற ஆகஸ்டு மீ 4௳ முதல் 10௳ வரை மரம் நடுவாரம் அனந்தப்பூர் சில்லாவில் கொண்டாடப் பட்டது. 74792 மரங்கள் நடப்பட்டன. செப்டம்பர் மீ 15௳ மதுரை சில்லாவில் மரம் நடுநாள் கொண்டாடப்பட்டது. தென் ஆர்க்காடு சில்லாவில் 14 கிராமங்களில் கிராமாபிவிருத்தி வாரம் கொண்டாடிய காலத்தில் 'சூரத்' திட்டத்தின்படி பலவேலைகள் செய்யப்பட்டன.

Press Communique No 2.

2. மேட்டூரிலிருந்து திருக்கோவிலூர் தாலுகா சிறு மதுரை முதலிய கிராமங்களுக்கும் பைக்காராவிலிருந்து உடுமலைப்பேட்டைத் தாலுகா குடிமங்கலம் முருங்கைப்பட்டி கடத்தூர் கிராமங்களுக்கும் கோயன்புத்தூர் தாலுகா மேலச்சித்திரைச் சாவடி, கவிகநாயக்கன் பாளையம் தொண்டாமுத்து கிராமங்களுக்கும் திண்டுக்கல் தாலுகா சின்னாளப் பட்டிக்கும் மேலூர் தாலுகா மேலூருக்கும் மின்சார சக்தி அனுப்பப்படுகிறது.

Press Communique No 97.

இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்.

1. கீழ்தர உயர்தர ஆரம்பப் பாடசாலை பாடத் திட்டம் வகுத்த கழகம் சிபார்சு செய்திருக்கிறபடி, 8வது வகுப்பு முடிவில் புதிய பரிட்சையொன்று வைக்க வேண்டுமென, சென்னை அரசாங்கம் கருதுகிறது. இதுவரை, 8வது வகுப்பு முடிவில், பதிலிபார்வையாளர்கள் (Deputy Inspectors) கீழுதவிப் பெண் பார்வையாளர்கள் (Sub-Assisstant Inspectoresses) பரிட்சித்து வந்தனர். இவ்விதப் பரிட்சை ஒரே மாதிரியாக இருக்கக்கூடியதில்லையாகையால், இந்த முறை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. புதிய பாடத் திட்டத்தின்படி மாகாணம் பூராவும் ஒரே காலத்தில் பரிட்சிக்கவும் சாத்தியமாக இருப்பதால் அவ்விதமே இனி மாகாணம் பூராவும் ஒரே மாதிரியான பரிட்சை வைத்து ஆரம்பக் கல்வியும் விருத்திசெய்யப்படும்.

இந்தப் பரிட்சை அரசாங்க வேலைகளுக்காக வைக்கப்படும் பரிட்சையுமல்ல;மேல்வகுப்புகளுக்குப் படிக்கப் போவதற்குதவக் கூடியதுமல்ல. இஃது, அங்கிலப் பள்ளிகளின் இரண்டாவது பாரத்திற்கே சமானமாகுமாதலால், இதில் தேறுகிறவர்களை அங்கிலப் பள்ளிகளில் 4வது பாரத்தில் சேர்த்துக்கொள்ளக் கூடியதுமில்லை. இந்தக் கல்வியே சாதாரண சனங்களுக்குப் போதியதாக இருக்கக் கூடுமென்று அரசாங்கம் கருதுகிறது.

மெயில்.

2. பள்ளிக்கூட வருட முடிவிலிருந்து பேடிசன் விடுதி மூடப்படும்; ஆனால், அதற்காகச் செலவாகிவந்த தொகையிலிருந்து சாப்பாட்டுதவிக்கு (Boarding grand) இலாயக்கான சென்னைக் கல்லூரி மாணவர்களில் 30 பெயருக்கும் வெளியூர் உயர்தரப்பள்ளி மாணவர்களில் 55 பெயருக்கும் உதவியளித்துவரப் படும்.

Press Communique No. 97.

3. பம்பாய் ஆரம்பப் பள்ளிகளுக்கு, சராசரி ஆசர் பையன்களின் பேரில் பையனுக்கு ரூ. 4 ஆகவும் பெண்கள் பின்னடைந்த

பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 6 ஆகவும் போதனுமுறைப் பயிற்சி பெற்றிருக்கும் ஆசிரியருக்கு ரூ. 25 ஆகவும் 20 பிள்ளைகளுக்கு மேல் படிக்கும் பள்ளிக்கூடங்களுக்கு உபகரணங்களுக்காக ரூ. 35 ஆகவும் மொத்தத்தில் பள்ளிக்கூடம் ஒன்றுக்கு ஒவ்வொரு வருடமும் ரூ. 200க்கு மேற் போகாமலும் உதவி செய்யப்படும். பின்னடைந்திருக்கும் பிரதேசங்களிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கும் ரூ. 250 வரைக்கும் உதவி செய்யப்படும்.

Bombay Information.

4. சண்டை காரணமாக, கட்டடங்கள் கட்டுவதற்குக் கடன் கொடுக்கக் கூடியதில்லையென்று சென்ற அக்டோபருக்குப் பின் நிறுத்தப்பட்டிருக்கிறது. திரும்ப ஏப்ரல் முதல் சுருங்கிய அளவு கொடுத்து வருவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

Press Communique No. 97.

5. கூட்டுறவு இலாகா அதிகாரிகளின் ஆட்சேபனைகளையும் மீறி உடுமலைப்பேட்டைக் கூட்டுறவு நகர பாங்கின் பழைய டைரக்டர்கள் கொடுத்த கடன்களில் வசூலாகாதிருப்பதைப் பழைய காரியதரிசியிடமிருந்து வசூலிப்பதென்று மேற்படி பாங்கின் மகாசபை சென்ற டிசம்பர் மாதம் 15உ கூடிய கூட்டத்தில் தீர்மானித்திருக்கிறது.

மெயில்.

ஈ. கூட்டச் செய்திகள்.

1. ஆலைத் துணிக்கும் நமக்கும் போட்டியேற்படாதவாறு விலையிலும் நூலிலும் ஒரு வரையறை ஏற்படவேண்டும். உதாரணமாக, ஆலைகளில் 40-ம் நெம்பருக்குக் கீழ்ப்பட்ட துணிகளை உற்பத்தி செய்தல் கூடாதென்றும், சாதாரணமாக ஆலைத் துணிகளின் விலை அந்த அளவு நூலின் விலைக்குமேல் இவ்வளவு பாகம் கூட்டி விற்கப்படவேண்டுமென்றும் சட்டமூலமாகத் திட்டம் செய்யலாம். அதுவுமன்றி, ஆலைகளில் துண்டுகள் (Towels) உற்பத்தி செய்தல் கூடாது என்று வரையறுக்கலாம். இதனால் சில ஆலைகள் நூல் விலையை அதிகப்படுத்தியும் துணி விலைகளைக் குறைத்தும் விற்பது நின்றுவிடும். சப்பான் போட்டியைத் தடுக்க, சப்பான் துணிகளின் பேரில் அதிக இறக்குமதி வரியை விதித்து அவை நம் கைத்தறித் துணியுடன் போட்டி போடாவண்ணம் செய்துவிடலாம். இந்திய அரசாங்கத்தினர் இதற்கெல்லாம் ஆகவேண்டிய பிரயத்தனஞ் செய்தல் வேண்டும்.

நெசவாளர்மாநாடு வரவேற்புரை
அருப்புக்கோட்டை சிவசுப்பிரமணிய முதலியார்.

திருவள்ளுவர் சங்கம் விருதுநகர்:—பின்னடைந்தும் தாழ்த்தப்பட்டுமிருக்கும் வகுப்பினர்கள் பொருளாதார நிலைமையிலும் குறைந்தும் பிறசாதியினர் அதிலும் உயர்ந்து வருவதினுலேயே சாதிசமய வேற்றுமை மிகுந்து வருவதைக் காண்கிறோம். ஆகவே அவ்வேற்றுமையொழிவதற்கு அவ்வகுப்பினர்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கான வேலைகளைப் பிறவகுப்புத் தலைவர்கள் அவர்களிடையில் சாதி சமய பேதமின்றிச் செய்து வருவதே அவசியமாகும்.

வேற்றுமை குறைந்தால் ஒழிந்தால் மட்டும் போதா. ஒற்றுமை வளருவதற்கான முயற்சியும் நமக்குள் வேண்டும். இலக்கியப் பயிற்சியொன்றே அதில் ஈடுபடுபவர்களையெல்லாம் இளகிய மனத்தராயும் நற்குண சீலராயும் பெருந்தன்மையாகப் பிறருக்கும் வெகுவாய் உதவுபவராயும் பிறரையும் தமராய்க் கொள்பவராயும் ஆக்கவுங்கூடும். அத்தகைய போக்கிற்கும் சாதி சமய, வேற்றுமை பாராட்டாத சங்ககால இலக்கியமே சாலச் சிறந்ததாகும். அவற்றினுள்ளும் பலரும் போற்றியும் தன்மை பாராட்டியும் கொண்டாடும் திருக்குறள் நமக்குள் வெகு விரைவாகவும் ஒற்றுமையை வளர்த்தல் கூடும். இந் நன்னோக்கத்துடன், விருதுநகர்வாசிகள் திருவள்ளுவர் சங்கத்தைச் சென்ற டிசம்பரில் துவக்கியதும் நம் ஆதிதிராவிடக் கிறித்துவ நண்பரொருவரைத் திருக்குறள் வாரவகுப்புக்குத் துணையாசிரியராகக் கொண்டதும், 'அவர் இவ்வன

வோடு அமைவர்; அவர் கடன் பணி செய்து கிடப்பதே' யென நாம் வற்புறுத்தியும் அவரை அந்தச் சங்க அமைச்சராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்ததும் விருதுநகர்வாசிகளின் பெருந்தன்மையான போக்கையும் நந்தமிழ் நாட்டிற்கு நல்ல காலம் விரைவில் பிறக்கக்கூடுமென்பதையும் விளக்கிக் கொண்டிருக்கின்றன. நம் ஆதிதிராவிடக் கிறித்தவ நண்பரொருவர் திருக்குறள் பிறருக்குச் சொல்லி வைக்கக்கூடிய திறமையுடன் சலியா உழைப்பிற்கும் பணிவிற்கும் தியாகத்திற்கும் ஒரு முன் மாதிரியாகவுமிருந்து பிறர் அன்பையும் ஆதரவையும் பெற்றிருப்பதைக் கண்டும் மகிழ்கிறோம். கடையடைப்பு ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும் மாதாந்தரப் பிரசங்கத்துக்கு ஆண்களும் பெண்களும் இந்துக்களும் முசலீம்களும் ஆதிதிராவிடர்களும் கிறித்தவர்களும் பெருந் திரளாக வந்து கேட்டானந்தித்துப்போவதும் நமக்கு மகிழ்ச்சியை விளைவிக்கிறது. இத்தகைய தமிழ்ச் சங்கங்கள் நாடெங்கும் பரவ வேண்டுமென்றும் விரும்புகிறோம்.

12. அறிவுரைத் திரட்டு:

அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள்.

1. ஆலையரிசியே சோகை முதலிய நோய்களுண்டாகக் காரணம்; அதனால் நம் உடல் பலவீனமாகிக் காசம் முதலியவற்றைத் தடுக்கவும் முடியாது போகிறது ... ஆகையால், அரசாங்கம் அதனைத் தங்களுக்குச் சாத்தியமான வழிகளிலெல்லாம் கட்டுப்படுத்த வேண்டும். சிறைக் கூடங்கள், மருத்துவ சாலைகள், கல்லூரி விடுதிகள், இருப்புப் பாதை விடுதிகள் (Railwry Refreshment Rooms) முதலிய இடங்களில், ஆலையரிசிக்குப் பதில் கைக்குத்தரிசியை உபயோகிக்கலாம். நெல்லரைக்கும் ஆலைகளுக்கு அனுமதி (License) தர மறுக்கலாம்... பிலிப்பைன் தீவுகளில் 246இராத்தல் கொண்ட மூடை யொன்றுக்கு ரூ 8—12—6 தீர்வை விதிக்கின்றனர். இவ்வரியை ஏற்று மதிக்கில்லாமல், ஆலையிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு மூடையின் பேரிலும் உடனுக்குடன் வசூலித்து வருகின்றனர். இறக்குமதியாகும் அரிசிக்கு இதே தீர்வை விதிக்கப்படுகிறது. இப்படியாக, உள் நாட்டரிசி மேலும் வெளி நாட்டிலிருந்து வரும் அரிசி மேலும் பளுவான தீர்வை விதிக்கப் படுகிறது. இதனால், ஆலையரிசியின், உபயோகம் வெகுவாய்க் குறைந்து, மக்கள் உடல் நலம் பெற்று வருகின்றனர்.

ஆலையரிசிக்கும் கைக்குத்தரிசிக்கும் விலைவாசியில் நம்நாட்டில் ஒரு மூட்டையின் பேரில் ரூ 1—8—0 வித்தியாசமேற்படும். இதைச் சரிக்கட்டும் அளவிலேனும் ஆலை யரிசியின் மீது தீர்வை போட்டால், ஆலையரிசியை உபயோகிப்பவரும், கைக்குத்தரிசியை உபயோகிப்பார்.

Harijan

2. திராட்சை எல்லா நாட்டினராலும் வெகுவாக உபயோகிக்கும் ஒரு பழம்; பச்சையாகவும் உலர்த்தித் தேனிலிட்டும் உணவிலும் தின்பண்டங்களிலும் மருந்துகளிலும் பலவிதமாகச் சேர்த்தும் உட்கொள்ளும் பழம்; விசேட நாட்களிலும் அது உபயோகிக்கப் படுகிறது.

நம்மிந்தியாவில் வருடத்தில் 12,500 ஏக்கரில் விளையக் கூடிய அளவு திராட்சை செலவாகிறது. இப்பொழுது 4,200 ஏக்கர் தான் பயிராகிறது. இதில் பாதிக்குமேல் பலுசித்தானத்தில் இருக்கிறது. கால் பங்கு பம்பாய் மாகாணத்திலிருக்கிறது. மிச்சமுள்ள கால் பங்கு வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சென்னை மாகாணம், மைசூர் இராச்சியமாகும்.

ஏற்றுமதி செய்யவேண்டிய அவசியமில்லாமலே இன்னும் மூன்று மடங்கு அதிகமாகப் பயிரிடலாம். அப்படியதிகமாகப் பயிரிடுவதால், திராட்சைப் பழ வருமானம் பின்னும் 60-70 இலட்ச ரூபா அதிகமாகும்.

மைசூர் இராச்சியத்திலும் பம்பாய் மாகாணத்திலும் உலகத்திலேயே எந்தப் பாகத்தையும்விடத் திராட்சை அதிகமாக விளைகிறது. இவ்விடங்களில் ஏக்கருக்கு முறையே 11, 610 இராத்தலும் 11,160 இராத்தலும் விளைகிறது. இதற்கடுத்த படியாக, காலி போர்னியாவில் ஏக்கருக்கு 7,678 இராத்தல் தான் விளைகிறது.

ஒரு ஏக்கரில் ரூ 600 முதல் ரூ 700 வரைக்கும் விளையும்; சில சமையங்களில் 2000 ரூபாவுக்கும் விளையலாம். ஆகையால், ஒருவன் குறைந்த அளவில் திராட்சை சாகுபடி செய்தாலும் கூட, அவனுக்குக் கணிசமான வரும்படி கிடைப்பதற்கு இடமிருக்கிறது. அப்படியிருந்தும் நம் நாட்டில் அதன் சாகுபடி நிரம்பவும் குறைவாயிருப்பதைக் கருத வருத்தமாயிருக்கிறது. கிராமப்புனருத்தாரணத்திலும் சீர்திருத்தத்திலும் சிரத்தை கொண்டிருப்பவர்கள் இந்த உண்மையை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

—மிராசுதார்-தழுவி எழுதியது.

3. தேனீக்களும் பழவகைகளும்:— கண்ணிற்கு இனியனவாகவும் வசீகரிக்கும் வாசனையுடையனவாகவும் இருக்கும் பூக்கள் நமக்காக அல்ல; தேனீக்களையும் பூச்சிகளையும் வசீகரிப்பதற்காகவே அப்படியிருக்கின்றன. தேனீக்களை, பூக்களைக் கணவனும் மனைவியுமாகச் சேர்த்து வைக்கும் குடும்பங்களாகவும் சொல்லலாம். இப்படி நடக்கும் கலியாணத்தின் பயனாக நமக்குக்காய்களும் பழங்களும் கிடைக்கின்றன.

சாதாரணமாகப் பூக்கள் காற்றிலும் கருவேற்பதுண்டு; ஆனால், அது திட்டமாக நிகழ்வதுமில்லை; அதில் சேதமும் உண்டு. சில பூக்கள் காற்றை நம்பியிராமல் தங்களைச் சேர்த்து வைக்கும் தேனீக்களுக்கும் பூச்சிகளுக்கும் உதவுவதற்காக இனிப்பான இரசத்தையும் சேர்த்து வைக்கின்றன; சில அழகிய வர்ணங்களோடும் பூக்கின்றன; வாசனையையும் வீசுகின்றன.

ஒரே பூவிலுள்ள மகரந்தமும் (Pollen ஆண்) முசலிமுடியும் (Stigma பெண்), ஒரே சமயத்தில் முதிர்வதில்லை. ஆகையால், ஒரே பூவிற்குள் சம்பந்தம் நேருவதில்லை. சில பூக்களில் முசலிமுடி மகரந்தத்துக்கும் மேலாக இருப்பதால், மகரந்தம் முசலிமுடியில் விழுவதுமில்லை. இன்னும் சில பூக்களில் மகரந்தம் மேற்கிளைப் பூவிலும் முசலிமுடி கீழ்க்கிளைப் பூவிலும் இருப்பதினாலும் சம்பந்தம் நேருவதில்லை, ஒரு பூவிலுள்ள மகரந்தத்திற்கும் மற்றொரு பூவிலுள்ள முசலிமுடிக்கும் சம்பந்தம் நிகழும் போதே, அதிகப் பலனும் திரட்சியான காய்களாக, பழங்களாகக் கிடைக்கிறது.

தேனீக்களினால் அவ்வித சம்பந்தம் நிகழக் கூடுமென்றால், மற்றும் பூச்சிகளால் நிகழ்வதைக் காட்டிலும் பலவிதத்திலும் ஏற்றமான சௌகரியங்கள் அமைகின்றன; நல்ல பலனுங் கிடைக்கும். மற்றப் பூச்சிகள் அனேகமாக மகரந்தம் ஒன்றையே நாடிச் செல்லும். தேனீக்கள் தேனைமட்டுமல்ல மகரந்தத்தையும் உணவாகக் கொள்வன. தேன்குடிக்கும் சில பூச்சிகள், பூக்கள் தேனை மூடிவைத்திருந்தபோதிலும் அவற்றைத் துளைத்துத் திருட்டுத்தனமாகக் குடித்துவிட்டுப் போய்விடுகின்றன; அவற்றினால் பூக்களுக்கு ஒரு பிரயோசனமும் ஏற்படுவதில்லை. தேனீக்கள் மகரந்தத்தையும் உண்பதால் ஒரு பூவிலுள்ள மகரந்தத்தை இன்னொரு பூவிற்கும் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. தேனீக்கள் மற்றப் பூச்சிகளைப்போலல்லாமல், ஒரே தடவையில் ஒரே விதமான பூக்களிலுள்ள தேனையே குடிக்கின்றன. ஆகையால், அவற்றில் ஒட்டும் மகரந்தம் கொஞ்ச

மூம் வீண்போவதில்லை. தேனீக்கள் தங்கள் மேலுள்ள உரோமத்தின் மூலம் அதிக மகரந்தத்தையும் கொண்டுசெல்லும். அவை மற்றப் பூச்சிகளைக் காட்டிலும் பருமனாக இருப்பதினாலும் அதிகம் உண்பதினாலும் அதிகப் பூக்களுக்குப் போகவும் செய்யும். வண்டுகள் போன்ற அனேகப் பூச்சிகள் மரங்களிலிருக்கும் காய்களையும் துளைத்துக் கெடுத்துவிடும். தேனீக்கள் அப்படிச் செய்வதில்லை. தேனீக்களைப் பழக்கவும் கூடுமாதலால், அவற்றை நினைத்த நினைத்த தோட்டத்திற்குக் கொண்டு போய்விடவும் முடியும்; மற்றப் பூச்சிகளை அப்படிச் செய்யவுமுடியாது. அனேகப் பூச்சிகள் குளிர்காலத்தில் இறந்து போகுமாதலால், அவை குளிர காலத்தில் பூக்கிற பூக்களுக்கு அவ்வளவாகப் பிரயோசனப்படமாட்டா.

(Rural India.) R. N. Mutto.

4: உரங்களின் தாரதம்மியம் :— நவச்சியக் கந்திகை (Sulphate of Ammonia) க்குப் பயிர் மும்முரமாக வருவதை யிட்டும் அதன் கிரயம் பிண்ணாக்கின் கிரயத்திற்கும் சௌக்கியமாகவே சண்டைக்குமுன் இருந்து வந்ததாலும், பிண்ணாக்கிலும் அதனையே முக்கியமாகச் சமுசாரிகள் உபயோகித்து வந்தனர். இப்பொழுதோ, பிண்ணாக்கின் விலையும் விழுந்து விட்டது; கந்திகையின் கிரயமும் உயர்ந்திருக்கிறது. இந்த நிலைமையில், நிலக்கடலைப் பிண்ணாக்கையோ வேறு பிண்ணாக்கையோ யிடுவதினால் குறைந்த செலவிலும் நல்ல பலனடையக் கூடுமென்பதை அனேக சமுசாரிகள் தெரிந்திருக்க வில்லை.

80 இராத்தல் கந்திகை இப்பொழுது ரூ 8 கிரயமாக இருக்கலாம்; அதே தொகைக்கு இரண்டு மூடை அதாவது 328 இராத்தல் நிலக்கடலைப் பிண்ணாக்கு வாங்கலாம். கந்திகையில் 20. 5 சதம் காலகம் (Nitrogen) இருக்கப் பிண்ணாக்கில் 7. 5 சதம் காலகமே யிருக்கிற தென்றாலும், ரூ 8 கந்திகையி லிருக்கிற காலகத்தைக் காட்டிலும் ரூ. 8 பிண்ணாக்கில் அரை வாசி அதிகமே காலக மிருக்கிறது. அதாவது ரூ 24 கந்திகையி லிருக்குமளவு காலகம் ரூ 16 பிண்ணாக்கினால் ரூ 24 கந்திகையின் பயனையு மடையலாம்.

உரச்சத்தின் தாரதம்மியத்தைச் சமுசாரிகள் தாங்களாகவே கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ளுவதற்குச் சௌகரியமாக 80 இராத்தல் நவச்சியக் கந்திகைக்கும் மற்றும் 164 இராத்தல் பிண்ணாக்கு வகைகளுக்கு முள்ள தாரதம்மியம் கீழே கொடுக்கப் படுகிறது.

	காலகச்சத்து	மதிப்பு.
நவச்சியக் கந்திகை	20. 5 சதம்	16 அணா
நிலக்கடலைப் பிண்ணாக்கு	7. 2 ,,	12 அணா
வெள்ளாமணக்கு முத்துப் பிண்ணாக்கு	6 ,,	10 அணா
கறுப்பாமணக்கு முத்துப் பிண்ணாக்கு	4. 5 ,,	7 அணா
வேப்பம் பிண்ணாக்கு	3. 5 ,,	6 அணா
புங்கம் பிண்ணாக்கு	3. 5 ,,	6 அணா

கந்திகை மூடை விலை ரூ. 6 ஆக இருந்தால், நிலக்கடலைப் பிண்ணாக்கு மூடை விலை அதற்கு முக்கால் வாசிக்கும் குறைவாக இருந்தால் தான் நிலக்கடலைப் பிண்ணாக்கு வாங்குவதில் இலாபம். அதேமாதிரியாக நிலக்கடலைப் பிண்ணாக்கின் விலையின் பேர்பாதிக்கும் குறைவாக வேப்பம் பிண்ணாக்கு, புங்கம் பிண்ணாக்கின் கிரய மிருந்தால்தான், பிந்தியவற்றை வாங்குவதில் இலாபம். ஆமணக்கம் பிண்ணாக்கில் எரிகைக்காடி அதிகமிருப்பதாலோ என்னவோ அது கந்திகை நிலக்கடலைப் பிண்ணாக்கைக் காட்டிலும் கரும்புக்கேற்ற உரமென்று அனுபவத்தில் காணப்படுகிறது. ஆகையால், அதன் விலை கொஞ்சம் கூடியிருந்த போதிலும் கருமபுக்கு அதனையே வாங்கியிடுவது நல்லது. கந்திகையுரமே யிடுவதென்றாலும், மேற்காடியெரிகையும் (Superphosphate) இட்டுத்தீர வேண்டும். அதன் கிரயத்தையும் கணக்கிட்டுப்

பார்க்கும்போது ஆமணக்கம் பிண்ணாக்குரமே சௌக்கியமாக இருக்கும்.

(இந்து) சோகிராசா. ஓய்வு பெற்றிருக்கும் உதவி விபசாயத் தலைவர்.

5. ஆடாதோடை யென்னும் செடியானது வேலிக்கால்களில் நட்டுப் பயிர் செய்தால் வேலிக்கு நிரம்பவும் அடம்பாக இருக்கிறது. மேல் கிளைகள் விறகுக்கு ஆகும். தழைகளை நாற்றங்கால்களில் போட்டு நன்ருக மிதித்துப் பரம்படித்துப் பின் விதைத்தால், நாறு நன்ருகப் பயிராகும்.

செய்கால் நிலங்களில் நடவுசேறு அடித்த பின் ஆடாதொடையின் தழைகளைப் போட்டு மிதித்துவிட்டுப் பின் நடவு நட்டால் பயிர் நன்ருகக் கிளம்பும். ஏக்கர் ஒன்றுக்குச் சுமார் 10 கலம் அதிகப்படியாக விளையும். களர்மண், உப்புமண், களிமண், நல்லமண் முதலிய பல வகை வயல்களுக்கும் உபயோகப்படும். உப்பு மண்ணுக்கு நிரம்ப அநுகூலமாகவு மிருக்கும். இதைப் பயிர் செய்யும் விதம் மேல் துனிரினி ருந்து ஒன்பது அங்குலம் கீழாக அறுவாளால் அறுத்து மழை பெய்துகொண்டிருக்கும் போதே பூமியில் மூன்று அங்குல ஆழம் நட்டு விட்டால் போதும். தொடர்ந்து தூற்றலும் மழையுமாக இருக்கும்போது இதை நட வேண்டும். மேலே தூற்றல் விழ விழ வெகு சீக்கிரமாக இந்தச் செடி துளிர் விடுகிறது. இதை எல்லாவிதமான புறம்போக்குகளிலும், வயல் வரம்புகளிலும், தோட்ட வேலிகளிலும் நட்டு விட்டால் நன்ருகப் பயிராகி அநேக வருடங்களுக்குச் சாகாமல் இருக்கும். வருடா வருடம் தழைகளை அறுத்து வயல்களுக்கு எருவாக உபயோகப்படுத்தலாம். இது சமுசாரிகளுக்குப் பணச் செலவில்லாததும் மிக நன்மை தருவதுமான உரமாகும்.

(மிராசுதார்) நல்ல விநாயகம் வைத்தியநாதையர்

ஆ. கிராமப் புனருத்தாரண தேச முன்னேற்றக் குறிப்புக்கள்.

1. அநீதிகளும், அக்கிரமங்களும், கொடுமைகளும், பேதா பேதங்களும், உயர்வு தாழ்வுகளும், காட்டு மிராண்டித் தனங்களும் நிறைந்துளது இவ்வுலகம். நூற்றுக் கணக்கான ஆயிரக்கணக்கான கொடியவர்கள், அறிவிலிகள், அன்பும் ஆராய்ச்சியும் அற்ற அசடர்கள், ஒழுக்கமற்ற கொடூரமான அயோக்கியர்கள், கொடுங்கோன்மை யாளர்கள், கொள்ளைக் காரர்கள், தம்மிடம் அகப் பட்டோரைக் கொடுமைப் படுத்தி அடக்கி ஒடுக்கிக் கசக்கிக் காலின் கீழ் மிதித்துச் சகல விதத்திலும் அவமானப் படுத்திக் கேலிசெய்து கொண்டு தாம் ஆடம்பரமான சகல சௌகரியங்களும் நிறைந்த இன்ப வாழ்க்கை அனுபவித்துக் கொண்டிருக்க, அங்ஙனம் கொடுமைப் படுத்தப்பட்டுள்ளோர் தாழ்மையிலும் அவமானத்திலும் ஆழ்ந்த வறுமையிலும் பிணியிலும் விளம்பரமில்லாத விவரிக்க வொண்ணாத துன்பக்கடலில் மூழ்கிச் சித்திரவதைப் படும் வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பதும், இவ்வுலகத்திலே காண்கிருேம். அவர்களுக்கு— வாழ்க்கைக்கு உடலும் உயிரும் ஒன்ருய்ச் சீவிப்பதற்குக் கூட, இன்றியமையாதனவான தேவைகளும் கிடைப்பதில்லை. இத்தகைய நீதியற்ற உலகம், ஒரு நல்ல தூய்மையான கடவுளின் கைவேலையாக இருக்கமுடியுமா? அப்படியிருந்தால், ஏன் இப் பேதா பேதங்கள் வித்தியாசங்கள் சமத்துவ மின்மை இருக்கின்றன? "இது ஒரு நியாயமான உண்மையான பாரபட்சமற்ற கடவுளின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது." என்பது உண்மையாகுமா? சாத்தியமா?

Lala Lajaput Rai.

(ஏழைகள் படும் சங்கடங்களைக் கண்டு சகிக்க முடியாத உள்ளம் பொங்கி, சங்கடப் படுத்துகிறவர்களையும் கடுமையாகப் பேசுகிறது; தெய்வ உண்மையையுங்கூடச் சந்தேகிக்கத் துணிகிறது. ப-ர்)

2. எனக்குப் பாதுகாப்பைப் பற்றி அவ்வளவாகத் தெரியாது; ஆனால், "நமக்கு வேண்டியவற்றை வெளிநாடுகளிலிருந்து வாங்கினால், பொருள்தான் நம்மிடமிருக்கும்; நம் பணம் வெளிநாடு போய்விடும்; நம் நாட்டிலேயே வாங்கினால், பொருளும் பணமும் நம் நாட்டிலேயே யிருக்கும்" என்பதைத் திட்டமாக அறிவேன்.

ஆபிரகாம் லிங்கன்.

3. இருபதாண்டுகளுக்கு முன் மைசூரில் 5000 ஏக்கரே தேக்கு மரங்களிருந்தன; இப்பொழுதோ 13000 ஏக்கரிருக்கின்றன; ஐந்நூறு கன அடி தேக்கு வெட்டினால், ஒரு ஏக்கர் தேக்கு, பதிலுக்குண்டுபண்ணப் படுகிறது. 1934ம் வருடத்தில் மட்டும் 1100 ஏக்கரில் தேக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அறுபதாண்டு கழிந்தால், ஆண்டிற்கு 500 ஏக்கர் தேக்கு வெட்டக்கூடும்; அரசாங்கத்திற்கும் ஆண்டிற்கு 5-7 இலட்ச ரூபா வருமானம் வரும்; வெளி நாட்டிலிருந்து தேக்கு வாங்கவேண்டியது மிராது.

Mysore Economic Journal.

4. இளைஞர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கிராமத்தின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். கிராமவாசிகளுக்குக் கல்வி புகட்டுங்கள். அவர்கள் ஒற்றுமையாயிருந்து, தங்கள் கேவல நிலைமையிலிருந்து மேலெழ உதவிபுரியுங்கள். இந்த முயற்சியில் புகழை எதிர்பாராதீர்கள். எவர் பொருட்டு நீங்கள் உயிரைக் கொடுக்கிறீர்களோ, அவர்களுடைய நன்றியைக்கூட எதிர்பாராதீர்கள். அதற்கு மாறாக அவர்களுடைய எதிர்ப்புக்கும் சித்தமாயிருங்கள். உங்களைச் சூழ்ந்திருக்கும் துன்பத்திலே ஒரு பகுதியை நீங்கள் ஏற்றுக் கொள்வதாக உறுதி செய்து கொள்ளுங்கள். அத்துன்பத்திற்குப் பரிகாரம் ஏற்படும்."

இரவீந்திரநாத் தாகூர்

இ. இலக்கிய இலக்கண அருங்கலைக் கல்வி போதனை முறை ஆராய்ச்சிக் குறிப்புக்கள்.

1. குழந்தைகளுக்கு எழுதப்படிக்கக் கணக்குகள் சொல்லிவைப்பதும் அவர்களுடைய கலைத்திறமையை விருத்தி செய்வதும் போதாது. அவர்கள் கீழே கண்டவிதமாகவும் பயிற்றுவிக்கப்பட வேண்டும்; அவையனைத்துமே ஒன்று போல் அவர்களுக்கு முக்கியமாகும். தனக்குத் தானேயும் பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டும்; தன் சுதந்தரத்தையும் புத்திசாலித்தனமாக உபயோகித்துவர வேண்டும்; தன்னையொரு தனிப் பொருளாகக் கருதாது, சமூகத்திலொருவனாகக் கொண்டு அதன் நன்மைக் கேற்க நடந்துவரவேண்டும்; பிறர் செலவினால் கேட்டினால் தனக்கு ஒரு நன்மையாவதையும் வெறுத்துத் தள்ள வேண்டும்; தன்னரசாங்க நிருவாகத்தில் அக்கறை கொண்டுள்ள ஒருவனாக விளங்கவேண்டும்.

Educative Method.

2. படிக்கும் முறை.

1. நல்ல வெளிச்சத்தில்படி; நிழலிலும் இருட்டிலும் படித்தல் கூடாது.

2. காற்றினால் அசையும் சுடருடைய விளக்கொளியிற் படித்தல் கூடாது.

3. படிக்கும் நூலின் மீது வெளிச்சம் விழுதல் வேண்டும். முகத்தின் மீது வெளிச்சமும் நூலின்மீது நிழலும் விழுகின்ற நிலையிற் படிக்கக்கூடாது.

4. குனிந்து கொண்டும் கவிழ்ந்து கொண்டும் படித்தல் கூடாது. நிமிர்ந்து படிப்பதே நேர்மை.

5. முகத்தருகே நூலை வைத்துப் படிக்கக்கூடாது. இயன்றவரை நூல் தொலைவிலேயே இருக்க வேண்டும்.

6. பொடி எழுத்துள்ள நூல்களைப் படித்தல் நன்றன்று.

சேந்தமிழ்ச் செல்வி.

ஈ. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள்

1. அறிவு நூற் புலவர் உலக சரித்திரத்திலே பழங் கற்காலம், புதுக் கற்காலம், வெண்கலக் காலம், இரும்புக் காலம் எனப் பலவேறு காலங்கள் இருந்தனவாகக் கூறுவார்கள். மக்கள் தங்களுடைய கருவிகளைச் செய்வதற்கு உபயோகித்த உலோகத்தையும், அவற்றைச் செய்த திறனையும் நோக்கியே, தாங்கள் இப்படி உலக காலத்தைப் பகுத்திருப்பதாகவும் அவர்கள் சொல்லுவார்கள். அவர்கள் சொல்லுவது சரியானால் - சரியல்லவென்பது நம் அபிப்பிராயம்-நம்முடைய காலத்தை இயந்திரக் காலம் அல்லது மின்சாரக் காலம் என்று பொருந்தச் சொல்லலாம்.

நம்முடைய இயந்திர நாகரிகம் விரைவில் வளர்ந்துவிட்டது. ஆனால், ஐயையோ, நாம் ஆசையாக அருமையாக வளர்த்த நாகரிகமாகிய இந்தக் கடா, இப்பொழுது நம் மார்பிலேயே பாய்கிறது! எவ்வளவு பரிதாபம்! பரிதாபம்!

மனிதனுக்கு இத சத்துருக்களாயிருப்பன தொழிற்சாலை இயந்திரங்களும் மோட்டாரும் விமானமும் மாத்திரமல்ல; நாகரிகமாகிய புது வெள்ளத்திலே வந்த பேசும் படக்காட்சி, ஆகாயவாணி, சுருட்டு சிகரெட்டு என்பன போன்ற பிற போகப் பொருள்கள் பலவற்றையும் இந்தப் பட்டியில் சேர்த்துக் கொள்ளலாம்.

பேசும் படக் காட்சி ஒழுக்கத்தையும் தூக்கத்தையும் எவ்வளவோ கெடுக்கின்றதே! (துட்டுக் கொடுத்தல்லவோ மரியாதையையும் ஆயுளையும் குறைத்துக் கொள்ளுகின்றனர். ப-ர்.) தூக்கம் வலிய வந்த காலமெல்லாம் போய், இப்பொழுது அதை விலைக்கு வாங்க வேண்டிய காலம் வந்திருக்கிறது. தூக்கத்திற்கு மருந்தும் மாத்திரைகளும் சாப்பிடுகிறார்கள், நாகரிக மக்கள்.

அவர்கள் இயற்கை யன்னை தன்னுடைய செல்லக் கையாலே கொடுக்கிற கைக்குத்தரிசியை உதாசீனம் செய்துவிட்டு ஆலைவாய்ப் பட்டு உயிர்போன சக்கையரிசியை விரும்பிப் புசிக்கின்றனர். அவர்கள், ஒரு கணம் உடம்பு குளிர்ச்சிக்காக விதவிதமான எண்ணெய் முழுக்கு தைல முழுக்கெல்லாம் செய்கின்றனர்; அடுத்த கணத்திலேயே கொதிக்கக் கொதிக்கக் காப்பி குடிக்கின்றனர். எப்படி இருக்கிறது பாருங்கள், நாகரிகத்தினுடைய போங்கு!

நம்முடைய முன்னோர்கள் மனிதனை "நடமாடுங் கோவில்" என்று வெகு பெருமையாகச் சொன்னார்கள். ஆனால், நாம் இக் காலத்து மனிதரை நடமாடுங் கொள்ளிக் கட்டைகள் என்றுதான் சொல்லவேண்டும்! பீடி சுருட்டு சிகரெட்டு ஆகிய நாகரிகக் கொள்ளிகள் தங்களுடைய விரலை உதட்டை

உடுப்பைச் சுடாவிட்டாலும், சந்தேகமறத் தங்களுடைய நரம்புகளையும் ஈரற்குலையையும் இரைப் பையையும் கல்லீரலையும் சுடுகின்றன என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கட்டும்.

நாகரிகம் நல்லதுதான், நமக்கும் வேண்டும்தான்; ஆனால், நாகரிகத்தினுடைய பெயரைச் சொல்லிக்கொண்டு, வருகிற சகலத்தையும் அப்படியே கட்டிப்பிடித்துத் தழுவிக்கொள்வது அறிவுடைமையாகாது. தார்த்தாரியைப் பிடித்த உருசியப் போர்வீரன், பிடித்த சற்று நேரத்திற்கெல்லாம், தன்னை அவன் விடுகிறானில்லையே என்று கதறின கதை ஞாபகமிருக்கட்டும். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நல்லதையே கைப்பிடியுங்கள்.

நல்வழி.

II. பொங்குக இன்பம் பொங்குக செல்வம்
பொங்குக புவிமுழு தினிமை
பொங்குக பொங்கல் பொங்குக நலங்கள்
பொங்குக அறச்செயல் யாவும்
பொங்குக தமிழும் பொங்குக புலமை
பொங்குக அறிவெனு மிரவி!
பொங்குக கலையே பொங்குக நல்லார்
பொங்குக இறையருட் பொலிவே.

—தமிழ்கலை.

III. 1. கிணற்றைக் காத்தால், வயிற்றைக் காக்கும்.
2. பாய்ச்சலும் வேண்டும், காய்ச்சலும் வேண்டும்.
3. கல்லுள்ளதே கிணறு, கரையுள்ளதே தோட்டம்.
4. உரம் உதவுவது ஊரார் உதவமாட்டார்.
5. கார் ஆடு, பிசாணம் குழை.
6. ஏவுகிறவனுக்கு வாய்ச்சொல், செய்கிறவனுக்குத் தலைச்சுமை.
7. ஏறச் சொன்னால், எருதுக்குக் கோபம்; இறங்கச் சொன்னால். நொண்டிக்குக்கோபம்.
8. எள்ளுவிழுந்தால், எடுக்கமகா சேனை; இடறி விழுந்தால்; எடுக்க மனிதரில்லை.
9. ஒட்டினால் தோட்டிலுங் கொள்ளும்; ஒட்டாவிட்டால் கட்டிலுங் கொள்ளாது.
10. கழுதைக்குபதேசம் காதிலே சொன்னாலும், அபயக் குரலின்றி வேறில்லை.

IV. 1. அயலார், உனக்கு எதைச் செய்ய நீ விரும்பாயோ, அதை நீயும் அவர்களுக்குச் செய்யாதே.
2. தன்னையறிந்தவன், சொல்லுவதில் குறைந்தும் செய்வதில் சிறந்தும் விளங்குவான்.
3. சிறந்தோர், வாக்குவாதங்களிற் சேராமலே சிறப்பையடைவார்கள்.
4. எளியவன் குறைகூறாமலிருப்பது கடினம்; செல்வவான் செருக்கின்னியிலிருப்பது சுலபம்.
5. நல்லவர் நன்மொழியுரைப்பது நிச்சயம்; ஆனால், நன்மொழி உரைப்பவரெல்லாம் நல்லவராகார். அறத்திலமைந்தவர், தீரமாகவேயிருப்பார்; ஆனால், தீரர்களெல்லாம் அறத்திலமைந்தவராகார்.

கன்பூசியன்.

கால்நடைச் சந்தைகளும் விபசாயக் கண்காட்சிகளும்

திண்டிவனம் தாலூகா மயிலத்தில் தைக்கார்த்திகை உற்சவத்தின்போது 3 நாட்கள் கால்நடைச் சந்தை நடைபெறும். (2) சேலம் சில்லா ஒசூர் தாலூகா மடகோண்டபள்ளியில் பிப்பிரவரி மீ இரண்டாவது வாரத்தில் 5 நாள் கால்நடைச் சந்தை நடைபெறும். சமீபத்திலுள்ள இருப்புப்பாதை நிலயமாகிய ஒசூரிலிருந்து 11 மைல். (3) நீவதநல்லூரில் மாசி மகத்தின்போது பிப்பிரவரி மீ கடைசி வாரத்திலிருந்து கால்நடைச் சந்தை நடைபெறும். சமீபத்திலுள்ள இருப்புப்பாதை நிலயமாகிய கும்பகோணத்திலிருந்து 6 மைல். (4) தென் ஆர்க்காடு சில்லா விருத்தாசலத்தில் மாசிமகம் உற்சவத்தின்போது பிப்பிரவரி மீ மூன்றாம் வாரம் விபசாயக் காட்சி நடைபெறும். (5) நல்லூரில் மகம் உற்சவத்தின்போது பிப்பிரவரி மீ 23 வ. விபசாயக் கண்காட்சி நடைபெறும். சமீபத்திலுள்ள இருப்புப்பாதை நிலயம் பாபநாசம். (6) திருவையில் மார்ச்சு மீ 1வ. முதல் 15வ. வரை கால்நடைச் சந்தை நடைபெறும். சமீபத்திலுள்ள இருப்புப்பாதை நிலயம் திருநெல்வேலி சந்தி.

THE EXCELSIOR
SCHOOL DICTIONARY
ENGLISH - ENGLISH - TAMIL
BY
K. V. SUBBAIYAR,
M. A. L. T., M. R. A. S.,

PRICE RS. 2 8 0
DO. JUNIOR PRICE RS. 1 4 0
DO. POCKET SIZE RE. 1 0 0

PERCIVAL'S
DICTIONARY
ENGLISH-TAMIL
PRICE RS 2 8 0
NEATLY BOUND WITH CALICO.

20.7.82

"மதுரைத் தமிழ்ப் பேரகராதி."

2000 பக்கங்கள் அடங்கிய புதியபிரதி.

"இவ்வகராதியில் இல்லாத தமிழ்வார்த்தை உலகிலேயே இல்லை" என்று கூறிவிடலாம். பத்திரிகைகளில் போட்டிப் பந்தய விடை எழுதுபவர்களுக்கு மிகவும் உதவிபுரிவது இவ் அகராதியே.

மஹா மஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி,
உ. வே. சாமிநாத ஐயரவர்கள்
முன்னுரையுடன் கூடியது.
விலை ரூபாய் 10-0-0.

E. M. GOPALAKRISHNA KONE, Sri Gopal Mahal, MADURA.

1941-ௐ பிப்பிரவரி—மார்ச்சு௴

விக்கிரம-ௐ | தை—மாசி௴ | கொல்லம் 1116-ௐ

திதி, நட்சத்திரம், தியாச்சியம் முதலியவை.

	இ.		த.	கிழ.	
	1		19	சனி	பஞ்-42-40, உத்திரட்-28-15.
	2		20	ஞா	சட்-47-49, ரேவ-34-30, திவி-1-23, சட்டி.
	3		21	திங்	சப்-53-5, அசு-40-53, ரா-0-42.
	4	தை௴	22	செ	அட்-58-4, பர-47 5, திவி-7-22, மொகரம் மகம்மதியவிடுமுறை.
	5		23	புத	நவ-60-0, கார்-52-41. திவி 19-53, கார்த்திகை மொகரம் மகம்மதிய விடுமுறை.
	6		24	வியா	நவ-2-20, உரோ-57-28, ரா-6-42, மொகரம் மகம்மதியவிடுமுறை.
	7		25	வெ	தச-5-40, மிருக-60-0 திவி-12-18, மொகரம் பொது விடுமுறை.
	8		26	சனி	ஏகா-7-44, மிருக-1-4, திவி-12-29, ஏகாதசி.
	9		27	ஞா	துவா-8-30 திருவா-3-21, ரா 4-42, பிரதோடம்.
	10		28	திங்	திரயோ 8-4, புனர்-4-29, திவி-24 27, தைப்பூசம்.
	11		29	செ	சதுர்-6-23, பூச-4-23, ரா-6-29. ○பௌர்ணமி.
பிப்பிரவரி௴	12		1	புத	பௌ-3-34, பிர-56-11, ரா-2-49.
	13		2	வியா	துதி-55-10, மக-1-3, பூர-57-9, திவி-20-6.
	14		3	வெ	திரு-49-56, உத்தி-54-41, திவி-14-25.
	15		4	சனி	சது-44-15, அத் 50-42, திவி-15-13, கடைசி சனிக்கு முந்தின சனி விடுமுறை.
	16		5	ஞா	பஞ்-38-23, சித்-46-38, திவி-9-21, ரா 30 19.
	17		6	திங்	சட்டி-32-32, சுவா-42-34, சேடம்-3-26, ரா 26-17.
	18		7	செ	சப்-26-53, விசா-38-44, ரா-18-45.
	19		8	புத	அட்-21-33, அனு-35-15, ரா-19-10.
	20		9	வியா	நவ-16-45, கேட்-32-23, ரா-22-15.
	21		10	வெ	தச-12-41, மூல-30-16, ரா-24-21.
	22		11	சனி	ஏகா-9-28, பூரா-29-5, ரா-19-36, ஏகாதசி.
	23		12	ஞா	துவா-7-24, உத்திரா-29-2, ரா-9-44, பிரதோடம்.
	24		13	திங்	திரயோ-6-30, திருவோ-30-8, ரா-11-1, மாசிவராத்திரி விடுமுறை.
	25	மாசி௴	14	செ	சதுர்-6-51, அவிட்-33-27, ரா-20-0, ●அமாவாசை.
	26		15	புத	அமா 8-30, சத-36-1, ரா-23-44, கரிநாள் சாம்பல்புதன் கிறிஸ்தவவிடுமுறை.
	27		16	வியா	பிர-11-25, பூரட்-40-12, கரிநாள்.
	28		17	வெ	துதி-15-22, உத்திரட்-46-19, திவி-6-27, கரிநாள் சென்சஸ் விடுமுறை.
	1		18	சனி	திரு-20-8, ரேவ 52-27, திவி-19-23 சதுர்த்தி சென்சஸ் விடுமுறை.
	2		19	ஞா	சது-25-13, அசு-58-54, ரா-18-13.
	3		20	திங்	பஞ்-30-26, பர-60-0, திவி 25-24.
மார்ச்சு௴	4		21	செ	சட்டி-35-7, பர-5-10, ரா-8-25, கார்த்திகை, சட்டி.
	5		22	புத	சப்-39-28, கார்-10-58, ரா-24-33.
	6		23	வியா	அட்-42-37, உரோ-15-51, ரா-1-3.
	7		24	வெ	நவ-44-36, மிருக-19-41, ரா-1-27.
	8		25	சனி	தச-45-17, திருவா-22-19, ரா-23-16.
	9		26	ஞா	ஏகா-44-38, புனர்-23-41, ரா-13-59, ஏகாதசி

Regd. No. M. 4126.

அன்புநிலை
தேடும் பருவமிது கண்டீர் ; சேரவாரும், செகத்தீரே.—தாயுமானவர்.

"கிராம தூதன்."

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

கிராம முன்னேற்றமே, தேச முன்னேற்றமாகும். கிராம முன்னேற்றத்திற்கும் கிராமவாசிகள் சுகவாழ்விற்கும் அவசியமான விவசாயம், கூட்டுறவு, கைத்தொழில், குடிசைத்தொழில், கல்வி, சுகாதாரம், குடும்பவாழ்க்கை பற்றிய பல நல்லுரைகளும், கதைகளும், மற்றும் கிராமவாசிகள், விபசாயிகளுக்குப் பிரயோசனமான செய்திகளும், அறிவுரைகளும், பஞ்சாங்கம் முதலியனவும் பிரதி அங்கிலமாதம் முதல் ஐந்து தெய்திக்குள் இந்தப் பத்திரிகையில் வெளிவரும். இதைப் படித்து, இதில் காணும் நலங்களைப் பிறர்க்குச் சொல்லுங்கள். சந்தேகம் தோன்றினால், குறை ஏதும் கண்டால் பத்திராதிபருக் கெழுதுங்கள்.

அங்கிலம் கற்றிராதார்க்கும் கற்றிருந்தும் போதிய சாவகாசமில்லாதார்க்கும் பெரிதும் பயன் படுமாறு, சிறந்த அங்கில நூல்கள், பத்திரிகைகள் அறிக்கைகளின் சாரமும், கட்டுரையாகவும் அறிவுரையாகவும் செய்திகளாகவும் இப்பத்திரிகையில் எழுதிவரப்படுகிறது.

இந்தப் பத்திரிகைக்கான கட்டுரைகள், மாற்றுப்பத்திரிகைகள், விமர்சனப் புத்தகங்கள் பத்திராதிபருக்கும் சந்தா பிரசுரகர்த்தாவிற்கும் அனுப்பப்படவேண்டும். பத்திரிகை ஏசன்சிக்கும் நீடித்தகால விளம்பரவிகிதங்களுக்கும் பிரசுரகர்த்தாவிற்கே யெழுதவேண்டும்.

வி. பி. தபாலினுல், சந்தாதாருக்கு அனுவசியமாகத் தபாற்செலவு அதிகமாவதால், இந்தப் பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை. சந்தா முன் பணமாகச் செலுத்தியிருக்கும் காலம்வரைக்கே பத்திரிகை யனுப்பிவரப்படும்.

பத்திராதிபர்.
இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை,
சீவில்லிபுத்தூர்.

பிரசுரகர்த்தர்.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

உள்நாட்டு வருடச்சந்தா	... ரூ 1—0—0	ஒரு பக்கம் விளம்பரம் ஒரு தடவை		10—0—0
வெளி ,,	... ரூ 2—0—0	அரைப்பக்கம்	,,	6—0—0
தனிப் பிரதி விலை	... ரூ 0—1—6	கால்பக்கம்	,,	3—0—0

முதல் மலர் (1939ம் வெளியுத்திய 12 இதழ்கள்) பைண்டு செய்து சில பிரதிகளேயிருக்கின்றன.
விலை ரூ. 1—4—0

ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி

ஆசானில்லாமல் ஆங்கிலங் கற்றுக்கொள்ளும் புத்தகம் இதுதான். இதில் இங்கிலீஷ் வார்த்தைகளை உச்சரிக்கும் விதமும், அவற்றின் அர்த்தங்களும் தெளிவாகவும், எவரும் எளிதில் அறிந்துகொள்ளும் விதமாகவும் தமிழ் உச்சரிப்புடன் விளக்கப்பட்டிருக்கின்றன. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு நான்கு பாஷைகளும் தனித்தனி புக் 1-க்கு விலை ரூ. 2.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன், புத்தக வியாபாரம், ஸ்ரீ கோபால் மஹால், மதுரை.

Printed at the Excelsior Power Press, North Chitrai St. Madura:-41.